விலை : 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 10 செவ்வாய்க்கிழமை (26.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 342

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# மாவீரர் தினத்தை நினைவு கூரத் தடை

## அரசு அதிரடி அறிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**மாவீரர் தினத்தை அனுசரிக்கக் கூடாது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அவ்வாறு அனுசரிப்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும் என்று அரசு கூறியிருக்கிறது. விடுதலைப்புலிகளைக் கொண்டாடுவதோ அல்லது அவர்களை ஊக்குவிப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும் என தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையம் தெரிவித்திருக்கின்றது.**

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது. அவ்வாறு மேற்கொள்பவர்கள் நீதிமன்றத்தின் மூலம் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள் எனறும் தேசிய பாதுகாப்புக்கான தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

இன்றையதினம்நவம்பர் 26 ஆம திகதி விடுதலைப்புலி களின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளாகும்.

நாளை உயிர் நீத்த விடுதலைப் புலிகளை அவர்களது ஆதரவாளர்கள நினைவு கூருகின்ற மாவீரர் நாளாகும். இந்தத் தினங்கள் இரண்டையும் விடுதலைப்புலிகள் வெகு விமரிசையாகக் அனுசரித்துவந்துள்ளனர்.

பொதுமக்களும் இந்தத்தினங்களில் தமது உயிர்நீத்த (விடுதலைப்புலி உறுப்பினர்கள்) இறந்த பிள்ளைகள் மற்றும் உறவினர்களை நினைவு கூர்ந்து வந்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் யுத்தத்தின் மூலம் முற்றாக அழிக்கப்பட்டுள்ள நிலையில், உயிரிழந்த விடுதலைப் புலிகளை நினைவு கூரக் கூடாது என அரசாங்கமும், இராணுவத்தினரும் அறிவித்து வந்துள்ளனர்.

எனினும், உயிரிழந்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களை நினைவு கூருவது ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்குள்ள உரிமையாகும்.

20-ம் பக்கம் பார்க்க

## பிரபாவின் பிறந்ததினம் இன்று யாழ்.நகரில் இராணுவம் குவிப்பு

**மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்படலாம் என்று அச்சம்**



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்ததினம் இன்று என்பதனாலும் நாளை மாவீரர் தினம் என்பதனாலும் யாழ்.நகரப்பகுதிகளில் இராணுவத்தினர் ஆங்காங்கே நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்ததினம் மற்றும் மாவீர்ர்தினத்தினை அனுஷ்டிக்கக் கோரி

20-ம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத்திற்கு எதிராக கூட்டு முயற்சிகள் தேவை!

**பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு**



(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிராக சர்வதேச ரீதியான ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர்கோத்தபாய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

காலியில் நேற்று ஆரம்பமான காலி கலந்துரையாடலில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், சில நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிரான தமது போராட்டங்களை தேர்ந்தெடுத்த நிலைப்பாட்டில மேற்கொள்கின்றன. பயங்கரவாதத்திற்கு

20-ம் பக்கம் பார்க்க

## அடிபணிந்து வாழ மக்கள் தயாரில்லை

– ஜனாதிபதி



(கொழும்பு)

ஆக்கிரமிப்புகளுக்குள் அடிபணிந்து வாழ்வதற்கு இலங்கை மக்கள்என்றுமே தயாராக இல்லை என்று ஜனாதி

20-ம் பக்கம் பார்க்க

## ஐந்து கிளைமோர் குண்டுகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஐந்து கிளைமோர் குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய், மத்தி குமரத்தோட்ட பகுதியில் இந்த கிளைமோர் குண்டுகள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.

தோட்டக்காணியொன்றில்கட்டிடம அமைப்பதற்காக தோண்டிய போது இந்த குண்டுகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர் இராணுவத்தினருக்கு வழங்கிய தகவலை அடுத்து, அங்குச் சென்ற இராணுவத்தினர் இந்த குண்டுகளை மீட்டுள்ளனர். (எ-11)

## வடக்கு மாகாண சபையுடன் பேசி அரசு இணக்கத்திற்கு வரவேண்டும்

**அமைச்சர் ராஜித ஆலோசனை**

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு விவகாரம், 13-ம திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துதல், தமிழ் மக்களுக்கான அரசியல சட்ட உரிமைகள் போன்ற விடயங்கள் குறித்து அரசாங்கம் வட மாகாண சபையுடன் கலந்துரையாடி சுமுகமான இணக்கப்பாடுகளுக்கு வருவதே சர்வதேச தலையீடுகளை தவிர்ப்பதறகான ஒரே வழி என்று மீண்டும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியதாவது,



பிரிட்டன் பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு எச்சரிக்கை விடுக்கும் அளவுக்கு கருத்து வெளியிடுவது

20-ம் பக்கம் பார்க்க

## படைத்தரப்பின் ஆலோசனை பெறாது இலங்கைக்கு அமைதிப்படை வந்தது

**இந்திய முன்னாள் தளபதி தகவல்**

(கொழும்பு)

இலங்கைக்கு இந்திய அமைதிப் படையை அனுப்பும் போது, படைத் துறையின் உயர்மட்டத்துடன் மத்திய அரசு எவ்வித ஆலோசனையையும் நடத்தவில்லை என இந்தியாவின் முன்னாள் படைத் தளபதி ஜெனரல் வி.பி.மாலிக் தெரிவித்துள்ளார்.

இவரால் எழுதப்பட்ட இந்தியாவின் படைத்துறை சார் முரண்பாடுகளும், இராஜதந்திரமும் முடிவெடுத்தலில் ஒரு பார்வை என்ற தலைப்பிலான நூல் சண்டிகரில் வெளியிடப்பட்ட போது, அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில், தேசிய பாதுகாப்புத் தொடர்பாக முடிவுகளை எடுக்கும் போது, படைத்துறையுடன இந்திய அரசியல் தலைமை கலந்தாலோசனை நடத்துவதில்லை.

குடியியல் மற்றும் படைத்துறை அதிகாரிகளுக்கு இடையிலான நம்பகத்தன்மையின் குறைபாடு இந்தியாவின் தந்திரோபாய கொள்கைகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

20-ம் பக்கம் பார்க்க

# பொதுமக்கள் மீது இராணுவம் தாக்குதல்

ஜனாதிபதியின் உருவம் பதித்த பதாகை சரிந்ததையடுத்து அங்கு கூடியிருந்த அவ்வூர் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் தெல்லிப்பழை கிழக்கு நாமகள் சனசமூக நிலையம் அருகே இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழைக் கிழக்கு நாமகள் சனசமூக நிலையம் அருகே ஜனாதிபதியின் உருவம் பதித்த பதாகை ஒன்று காணப்பட்டது.

நேற்றும், நேற்று முன்தினமும் குடாநாட்டில் பெய்த கன மழை காரணமாக அப்பதாகை சரிந்துள்ளது.

இதனை அவதானித்த இராணுவத்தினர் குறித்த பதாகையை யார் சரித்தார்கள் எனக் கேட்டு அங்கு நின்ற பொதுமக்களிடம் முரண்பட்டதோடு அங்கு நின்ற பொதுமக்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தினமானது நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில் வடக்கில் இராணுவத்தினர் வீதியெங்கும் குவிக்கப்பட்டிருக்கும் நிலையில் இச் சம்பவமானது தெல்லிப்பழையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ-4)

# 600 ஏக்கர் தமிழர்களின் காணிகள் கொக்குத்தொடுவாயில் பறிமுதல்

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட கொக்குத்தொடுவாயில் சிங்களவர்கள் தோட்டம் செய்ய சுமார் 600 ஏக்கர் தமிழர்களின் பூர்வீக நிலம் அபகரிக்கப்படுகிறது எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

உச்சக்கட்ட வேகத்தில் நில அபகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக தெவித்துள்ள வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கொக்குத்தொடுவாய் கோட்டைக் கேணி பிள்ளையார் கோயிலிலிருந்து சுமார் ஒன்றரை மைல் தூரத்திலேயே இவ்வாறான நிலக்கொள்ளை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதேச மக்களின் தகவலை அடுத்து அங்கு சென்று மக்களுடன் கலந்துரையாடிவிட்டு அங்கு இடம்பெறும் நில அபகரிப்பை நேரில் அவதானித்தார்.

சம்பவ இடத்திற்கு ரவிகரன் சென்றபோது, இரண்டு கொட்டில்களில் இருந்த சிங்களவர்களால் கனரக இயந்திரங்களின் உதவியோடு காடழிப்பு இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இதையடுத்து இக்காடழிப்பு தொடர்பில் அவர்களிடம் நேரில் அவர விசாரித்தார். இதன் போது அவர்கள் பயந்த சுபாவத்தோடு , தாங்கள் ஒப்பந்த அடிப்படையில் காடு அழிப்பதாகவும், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இது நடைபெறுவதாகவும் இத்திட்டத்தில் 22 சிங்களவர்களுக்கு தலா 25 ஏக்கர் வீதம் மாங்கன்றுகளை நடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நடவேண்டிய மாங்கன்றுகளை தாம் கொண்டுவந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதே வேளை அப்பகுதிக்குச் சென்ற ரவிகரனை இராணுவப் புலனாய்வாளர் ஒருவர் பயணம் நெடுகிலும் தொடர்ந்து வந்துள்ளார். ஒரு கட்டத்தில் ரவிகரன் அவரிடம் எதற்காக என்னைப் பின்தொடர்கிறீர்கள்? என்று கேட்டார். ஒருவாறாக சமாளித்துக்கொண்டு தன்னை இராணுவப் புலனாய்வாளர் என அவர் அறிமுகப்படுத்த அதற்கு பதிலளித்த ரவிகரன் இங்கு இடம்பெறும் மோசமான நிலக் கொள்ளையை உலகறியச் செய்யவே நான் வந்துள்ளேன் நாளை விடரமாக ஊடகங்களில் இது வெளிவரும். ஆகவே என்னைப் பின் தொடர வேண்டிய அவசியம் உங்களுக்கில்லை என்று பதிலளித்து விட்டுச் சென்றார். (எ-6)

# தாக்குதலுக்கு இலக்கான குழந்தை உயிரிழப்பு

குடும்பஸ்தர் ஒருவரால் அடித்துக் காயப்படுத்தப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஒன்றரை வயது குழந்தை சிகிச்சை பலனின்றி 6-வது நாளான நேற்று உயிரிழந்துள்ளது.

யாழ்.அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியில் இடம்பெற்ற இந்த விபரீதச் சம்பவத்தினால் உயிரிழந்த பிரிசில் டிலக்சன் எனும் ஒன்றரை வயதுச் சிறுவனின் உயிரிழப்பு காரணமான நபர் ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சிறுவர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் போது சந்தேக நபர் மதுபோதையில் இருந்ததாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 19-ம் திகதி இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் நேற்று உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# ஜெயபாலனின் கைது விடயத்தை மனிதாபிமானத்துடன் அணுகுக

## ஈ.பி.டி.பி கோரிக்கை

ஜெயபாலனின் கருத்துச் சுதந்திரத்தையும், தாயாருக்கு அஞ்சலி செலுத்துவதற்குமுள்ள உரிமையையும் மனிதாபிமான அடிப்படையிலேயே நோக்கப்பட வேண்டும் என ஈ.பி.டி.பி ஊடகப் பேச்சாளர் சி தவராசா ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கவிஞர் ஜெயபாலன் கைது செய்யப்பட்டிருப்பது தொடர்பாக பல்வேறு தளங்களில், பலவாறான கோணங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

நீண்டகாலமாக நோர்வேயிலும், இந்தியாவிலும் தங்கியிருந்த ஜெயபாலன் தனது தாயாரின் கல்லறைக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மாங்குளத்துக்குச் சென்றபோது கைது செய்யப்பட்டிருப்பதாக அவரது மனைவியினால் கூறப்பட்டிருந்தும், அவர் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகை தந்து, அவ் விசா விதிமுறைகளுக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபட்டதனால் அவரை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தடுத்து வைத்துள்ளதாக பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்தின் இறுதி வாரமானது பிரபாகரனின் பிறந்த தினத்தை ஒட்டியதாக இருப்பதால், தேவையற்ற அசம்பாவிதங்களுக்கு இடமளித்துவிடக் கூடாது என்பதில் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பது வழமையாகும்.

இக்காலகட்டத்தில் ஜெயபாலனின் வருகையும், அவர் காட்டிய பரபரப்பும் இந்த அசம்பாவிதங்களுக்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

எனவே, அவ்ரின் முதுமையையும், சூழலையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதன் அடிப்படையில் கவிஞர் ஜெயபாலனை விடுதலை செய்து, நோர்வே நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கு மனிதாபிமான அடிப்படையில் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈ.பி.டி.பி கேட்டுக் கொள்கின்றது.

கவிஞர் ஜெயபாலன விடுதலைதொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், உரியவர்களுடன் பேச்சுக்களை நடத்தவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி முயற்சிகளை எடுத்துள்ளது என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பிரதேச சபையில் வைத்து மாவீரர்களுக்கு அஞ்சலி

## வடமராட்சி தெற்கு மேற்கில்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்காக போராடி உயிர் நீத்த மாவீரர்களுக்கும் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் தொலைக் காட்சியின் செய்தி வாசிப்பாளரான இசைப் பிரியாவுக்கும் மலர்கள் தூவி விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப் பட்டுள்ளது.

வடமராட்சிதெற்கு மேற்கு பிரதேசசபையில் இவ் அஞ்சலி நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு தவிசாளர் கொ. வியாகேசு தலைமையில் நடைபெற்றது.

இதன் போது, கடந்த 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற இவ்வேளையில் கரவெட்டி பிரதேச சபையிலும் மாவீரர் தினம் நினைவு கூரப்பட்டுள்ளது.

இதில் சபை உறுப்பினர்கள் மலர்கள் தூவி விளக்கேற்றி தமது வீர வணக்கத்தை செலுத்தி மாவீரர்களை நினைவு கூர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-9.15)

## தவறிவிட்டது

SK 5630 இலக்க வாகனத்தின் இன்சூரன்ஸ் மற்றும் ரக்ஸ் (வரிப் பத்திரம்) அத்துடன் தேசிய அடையாள அட்டை (951723 940V ) கடந்த 21-11-2013 வியாழக்கிழமை சுன்னாகத்திற்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் **077 9216173** என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். (4585)

(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

## மரண அறிவித்தல்



**சி. பொன்னம்பலம்** (சமாதான நீதவான்)

*புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்பலம் அவர்கள் 25.11.2013 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் சின்னத்தம்பி சோதி தம்பதியினரின் அன்புப் புதல்வனும் றீசா ரஞ்சினியின் பாசமிகு கணவரும் டிலிகாகௌரி, சர்மிளா ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் பரமேஸ்வரி, யோகநாதன், தவமலர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் பொரளை பாலர் சுப்ரின் மலர்சாலையில் நடைபெற்று, 27/11/2013 (புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

புத்தூர் கிழக்கு, புத்தூர். (4584) தகவல் : குடும்பத்தினர்.

## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829
(சி-5569)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER
(C-5567)



## கண்ணீர் அஞ்சலி

வலி.கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலக ஆயுர்வேத வைத்தியசாலையில் ஆயுர்வேத மருந்தாளராக கடமையாற்றும் திருமதி பி. அம்பிகைதேவி அவர்களின் தந்தையாரான

**தம்பையா கனகசபை**

**(முன்னாள் ஆயுர்வேத மருந்தாளர் -வலி. கி.பி.ச)**

25.11.2013 அன்று காலமான செய்திகேட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

-ஊழியர் நலன்புரிச்சங்கம், வலி. கிழக்கு பி.சபை, புத்தூர்.

(4582)

# இன்று ஒரு தகவல்

## கவிஞர் யார்? பண்டிதர் யார்?

சமஸ்கிருதத்தில் மகாகவியாக விளங்கியவர் பவபூதி. அவர் மிகப்பெரிய அறிஞர் பக்திமான்.

அவரது அறிவையும் பக்தியையும் கண்டு சரஸ்வதி தேவியே ஒரு சிறுமியின் வடிவில் வந்து அவருக்குப் பணிவிடை செய்து வந்தாள் என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்தே பவபூதியின் பக்தியின் சிறப்பை நாம் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

ஒருநாள் பவபூதியைப் பார்ப்பதற்கு காளிதாஸனும், தண்டியடிகளும் பவபூதியின் வீட்டுக்குச் சென்றார்கள். இவர்கள் வந்த சமயத்தில் பவபூதி பூஜையில் ஈடுபட்டிருந்தார். வாசலில் அந்தச் சிறுமி மட்டும் நின்றிருந்தாள்.

இவர்களைப் பார்த்ததும் அவள் அவர்களை வரவேற்று, "வாருங்கள்! சிறிது நேரம் இப்படி உட்காருங்கள். அவர் பூஜையில் இருக்கிறார். இப்போது வந்து விடுவார்!" என்றாள். "சரி!" என்று சொல்லி இருவரும் அங்கு அமர்ந்தார்கள்.

தண்டியடிகள் அச்சிறுமியைப் பார்த்து, "பூரண சந்திரன் போன்ற முகத்தை உடையவளே! கொஞ்சம் பாக்குத்தூள் கொண்டுவா! (பூக்க சூர்ண மானியதாம் பூர்ண சந்திர நிமானனே)" என்றார்.

அடுத்ததாக காளிதாசன் "காதளவு நீண்ட கண்களை உடைய பெண்ணே! பொன்னிறமான வெற்றிலையும் எடுத்துவா! (ஸ்வர்ண வர்ண பர்ணம் கர்ணாந்தாய லோசனே)" என்றார்.

இவர்கள் சொன்னதைக் கேட்ட சிறுமி, "சரி" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள். வெற்றிலை, பாக்கு எடுத்துக் கொண்டு வந்த அவளை, பூஜை முடிந்து வந்த பவபூதி பார்த்தார். "யாருக்கம்மா வெற்றிலை, பாக்கு?" என்றார்.

அதற்கு அவள், "கவிஞராகிய காளிதாசருக்கும் பண்டிதராகிய தண்டியடிகளுக்கும் எடுத்துக் கொண்டு போகிறேன். (கவியே காளிதாசாய பண்டிதயா தண்டினே)" என்றாள். அவள் கூறியதைக் கேட்ட பவபூதி அசந்து போனார்.

"அது சரியம்மா! காளிதாசரைக் கவிஞரென்றும் தண்டியடிகளைப் பண்டிதர் என்றும் சொல்கிறாயே! ஏன் அப்படி?" என்று கேட்டார். அதற்கு அச்சிறுமி பின்வருமாறு விளக்கம் கொடுத்தாள்.

"காளிதாசர் என்னை 'காதளவு நீண்ட கண்களை உடையவளே!' என்று வர்ணித்தார். உனக்கு நீண்ட கண்கள் இருக்கின்றன; அதைக் கொண்டு பொன்னிறமான வெற்றிலையைத் தேடி எடுத்துவா!" என்று சொன்னார். 'பயனற்ற வர்ணனை எதுவுமில்லாமல் காரண காரியத்திற்கு ஏற்றாற்போல் பயன்படுத்துபவன் தான் கவிஞன்' ஆனால் காரண காரியம் பார்க்காமல் வெறும் வர்ணனையைக் கையாள்பவன் பண்டிதன்.

"தண்டியடிகள் பாக்குத்தூள் கேட்டார். என்னை பூரண சந்திரன் போன்ற முகத்தையுடையவளே! என்று வர்ணித்தார். இந்த வர்ணனைக்கும் பாக்குத்தூள் கொண்டு வருவதற்கும் ஒரு தொடர்புமில்லை. இது வெறும் சொல் அலங்காரந்தான். பண்டிதர்கள் தான் பொருளைப் பற்றிய கருத்து இல்லாமல் அணிகளைப் பயன்படுத்துவதில் விருப்பம் கொண்டவர்கள்.

எனவே தான் காளிதாசரைச் கவிஞர் என்றும், தண்டியடிகளைப் பண்டிதர் என்றும் குறிப்பிட்டேன்" என்று சொல்லி முடித்தாள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாட்டின் வீதி அபி.பணிகள் கைவிடப்பட மாட்டாது

## நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் நெடுஞ்சாலைகளையும வீதிகளையும் அபிவிருத்தி செய்யும் பணிகள் தொடர்ந்தும் அதே வேகத்தில் மேற்கொள்ளப்படும் என்று துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைசசின் மேலதிக செயலாளர் எம்.சி.லால பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அடுத்தாண்டில் நெடுஞ்சாலைகளை நிர்மாணித்தல் மற்றும் வீதியமைப்பு பணிகள் இப்போது இருப்பதை விட விரிவான அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு இங்கு நடைபெறுவதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்னரே அரசாங்கம் வீதியமைப்பு, நெடுஞ்சாலைகளை அமைக்கும் திட்டங்களை சிறப்பாக ஆரம்பித்ததென்றும் அரசாங்கம் எக்காரணம் கொண்டும் அபிவிருத்திப் பணிகளை கைவிடப போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருப்பதனால் அப்பணிகளை முன்பிருந்ததை விட வேகமாக தங்கள் அமைச்சு மேற்கொள்ளும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு ஏனைய அமைச்சுக்களை வட ஆகக்கூடுதலான தொகை, அதாவது 141 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் அபிவிருத்திப பணிகள் தொடர்ந்தும் நடைபெறும்.

இதேவேளையில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன கிராமங்களை நகரங்களுடன் இணைக்கும் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 7ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இவ்வாண்டில் இப்பணிகளுக்கு 6ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாவது புதிய களனி பாலத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கென ஜப்பானிய சர்வதேச நிறுவனம் இலங்கைக்கு ஒரு இலட்சம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த வீதி விரைவில் தற்போதையை கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதையுடன இணைக்கப்படவுள்ளது. (அ-2)

## தரம் 5 பரீட்சை முடிவு வெளியீடு குறித்த அறிக்கை விரைவில்

(கொழும்பு)

ஐந்தாமாண்டு புலமை பரிசில் பரீட்சையில் மேற்கொள்ளப்பட வேணடிய மாற்றங்கள் குறித்து, கல்வியியலாளர்களிடம் பெறப்பட்ட கருத்துகள் அடங்கிய அறிக்கை எதிர்வரும் வாரங்களில் வெளியிடப்படும என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறை சிறுவர் தினமன்று புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதால் பாரிய பிரச்சினை ஏற்பட்டது.

இது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

முறைப்பாட்டின் அடிப்படையில் 30 கல்வியியலாளர்களிடம் கருத்தறிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது.

அதன் இறுதி அறிக்கை எதிர்வரும் வாரங்களில் வெளியிடப்படும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பிரதிபா மகாநாமஹேவா தெரிவித்தார். (அ-2)

## மணல் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். நீதிமன்ற வளாகத்தில் நடத்தப்படும்.

பகிரங்க ஏல விற்பனையில் மணலைப் பெற்றுக் கொள்பவர்கள் கொடுப்பனவுகளைக் காசாகவே கொடுத்தல் வேண்டும்.

அத்துடன் பெற்றுக் கொள்ளும் மணலை அன்றைய தினம் மாலை 6 மணிக்கு முன்ன தாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றி விட வேண்டும் என யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (அ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 120 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 | 100 |
| தக்காளி | 40 | 40 | 50 - 60 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 | 40 |
| கோவா | 25 | 30 | 40 | 50 |
| கரட் | 40 | 40 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 210 | 190 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 150 | 170 | 200 | 200 |
| பாகற்காய் | 60 | 80 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 20 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 | 60 |
| பயற்றங்காய் | 30 | 40 | 40 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 15 | 30 | 30 | 50 |
| கறிமிளகாய் | 80 | 60 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 50 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 100 | 110 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 30 | 25 |
| தேசிக்காய் | 120 | 120 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 35 - 40 |

## இராசி பலன்

*26.11.2013*
*(கார்த்திகை 10, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு*
*அட்டமி முற்பகல் 10.35 மணிவரை*
*பூரம் முழுவதும்*
*இராகுகாலம் 3.12-4.42 மணிவரை*
*சுபநேரம் 10.42-12.12 மணிவரை*

**மேடம்** தாழ்ந்த சுபாவமுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், சில காரிய இடையூறுகள் ஏற்படலாம்.

**இடபம்** தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், வீட்டில் விருந்தினர் வருகையுண்டு, தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பும் அறிவுரையும் கிடைக்கும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுப்பணிகளில் உங்களின் செல்வாக்குகூடும்,வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் இடம்பெறலாம், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.

**சிங்கம்** நண்பர்கள் ஒளிவுமறைவின்றிப் பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை குடும்பச்சுமை கூடும்.

**கன்னி** சுப விரயங்கள் கூடும் நாள், சயன சுகக் குறைவான நாள், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள் பிதா சிந்தையுண்டு, சிலர் மீது காரணமில்லாமல் கோபப்படுவீர்கள்.

**துலாம்** எதிர்கால வெற்றிக்கு திருப்புமுனையான நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலைகள் உருவாகும், உற்சாகமான நாள், புகழ்கூடும்.

**விருச்சிகம்** தேவைகள் பூர்த்தியாகும், எதிர்பாராத வகையில் ஒருவரின் உதவிகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, கடின உழைப்பில் ஈடுபடுவீர்கள், போசன நன்மையுண்டு.

**தனுசு** குடும்பத்தில் நிலவிய கசப்புணர்வுகள் குறைவடையும், உதாசீனப்படுத்தியவர்கள் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**மகரம்** எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப்படலாம், தேக நலன் பாதிக்கப்படலாம், பிரயாண பயமுண்டு, போசன சுகமுண்டு தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தேகநலனில் இருந்த பாதிப்புகள் அகலும், முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

வளவன்

# நெல்லியடி பொலிஸாருக்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றம்

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் நேற்று நெல்லியடிப் பொலிஸாருக்கு எதிராக கண்டனத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.


கரவெட்டி இராஜ கிராமத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 5.45 மணியளவில் சிவில் உடையில் சென்ற நெல்லியடிப் பொலிஸார் அப்பகுதி மக்கள் சிலர் மீது மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பெண்கள் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் ஏனையோர் சிறு அடி காயங்களுக்குட்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் ஒருவர் தப்பி ஓடி வந்ததாக கூறியே அம்மக்களுடன் முரண்பட்ட பொலிஸார் இத் தாக்குதலை மேற்கொண்டதாக தெரியவருகின்றது.

இத்தாக்குதல் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகவும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற மாதாந்த கூட்டத்தில் உறுப்பினர் ஆ.மதியரசன் பிரேரணையை முன்வைக்க, க.பரஞ்சோதி ஆமோதித்தார்.

இதனையடுத்து, சபையில் கண்டனத் தீர்மானம் சபையினரால் ஏகமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அத்தோடு இத்தாக்குதல் தொடர்பில் நீதியான முறையில் விசாரணைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தி பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீ நிதிநந்தசேகரத்திற்கு சபையினால் கடிதம் ஒன்றை உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-9)




நன்றி: மிரர்

# 2014 ஆம் ஆண்டில் உலகின் போக்கு எமக்கு சாதகமாகவே திரும்பும்

## சரியாக பயன்படுத்துமாறு சிறிதரன் எம்.பி வலியுறுத்து

(சாவகச்சேரி)

எமது வரலாறுகளையும் கடந்து வந்த பாதைகளையும்நாமே கூறவேண்டும். இவற்றை வேறு எவரும் கூறமாட்டார்கள். ஏனெனில் நாம் தான் எமது உரிமைகளுக்காக போராடும் இனம். எமக்கான விடுதலை இன்னமும் கிடைக்கவில்லை. இராணுவத்தின் அடக்கு முறைகளின் மத்தியிலே வாழ்கின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நுணாவில் பொது நூலக தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், எமக்கு உரிமை கிடைக்கவில்லை என்பதற்காக சந்தோஷங்களை நாம் இழந்து விட முடியாது. இச் சமுதாயத்தில் இனிவரும் காலங்களில் எமது பிள்ளைகள் வாழ வேண்டும்.

எனவே, அவர்களுக்கு வாழ வழிகாட்டுவதோடு எமது இனத்தின் அடையாளங்களையும் வெளிப்படுத்துவதும் அவசியம்.

அத்தோடு, நாம் இன்று வரையும் இராணுவ அடக்குமுறைகளுக்குள்ளேயே வாழ்கிறோம். இதன் காரணமாக மாகாணசபைகூட சரியான நடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளது.

நாம் எம் சொந்த நிலங்களுக்காக போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் எமக்காக குரல் கொடுக்கின்றன. அண்மையில் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இங்கு வந்து எமக்காக கதைத்துள்ளதோடு இக் குற்ற பிரச்சினைகளை தமது பாராளுமன்றத்திலும் எடுத்துரைத்தார்.

எனவே, 2014 இன் உலகப் போக்கானது எமக்கு சாதகமாக திரும்பவுள்ளது. ஆயினும் அத்திருப்பத்துக்கு சாதகமான பாதைகளை உருவாக்கி எப்படி எமது நடவடிக்கைகளை எடுத்துச் செல்லப் போகின்றோம் என்பதில் தான் அதன் பயன் தாக்கியுள்ளது.

நாம் கேட்பது எமது மண்ணில் நம்மை நாம் ஆளும் ஆட்சியையும் மக்களின் அபிலாசைகளை அடையக் கூடியவாறான வடக்கு கிழக்கு இணைப்பையுமே., தற்போது எமது நிலங்கள் பறிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றினை வெல்ல என்ன வழிகளைக் கையாளலாம் என ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இங்கு அதிபர்களெல்லாம் கப்டன்கள், ஆசிரியர்கள் மேஜர்கள், மாணவர்கள் சிப்பாய்கள். தென்பகுதியில் சென்று பார்த்தால் அங்கு சில சம்பவங்கள் சாட்சிப்படுத்தப்பட்டு ஆவணமாக்கப்பட்டுள்ளன.

நமது யாழ்.பொதுநூலகம் எரிக்கப்பட்ட விடயமோ அரிய நூல்கள் அழிக்கப்பட்ட விடயமோ இதுவரை எவருக்கும் தெரியாதுள்ளது. இந்நிலை இனிவரும் காலங்களில் மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-9-29)

# சா/த மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

(மானிப்பாய்)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை தயார்படுத்தும் முகமாக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தொடர் இலவசக் கல்வி கருத்தரங்குகள் இடம் பெற்று வருகின்றன.

இதில் 6ஆவது கருத்தரங்கு தேசியப் பாடசாலைகளில் ஒன்றான மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்றும்,நாளையும் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவரும் முன்னாள் தேசிய சம்மேளனப் பிரதிநிதியுமான ஆர்.ரவீந்திரன், கௌரவ விருந்தினர்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் நெடுந்தீவு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அமலஜான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை விஞ்ஞான பாடத்திற்கான செயலமர்வும் நாளை புதன்கிழமை கணித பாடத்திற்கான செயலமர்வும் இடம்பெறவுள்ளது. (அ-9-23)

◆ ◆ ◆ ◆ ◆ ◆

(யாழ்ப்பாணம்)

க.பொ.த சாதாரண தர பரீட் சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக மீசாலை உயர் கலைக் கல்லூரியில் நடத்தப் படும் இலவசக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை பிற்பகல் 2.30 மணிக்கு உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், சமயம் மற்றும் ஏனைய பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி இன்று தமிழ்ப் பாடத்திற்கான கருத்தரங்கும் நாளை புதன்கிழமை கணித பாடத்திற்கான கருத்தரங்கும் நாளை மறுதினம் வியாழக்கிழமை விஞ்ஞான பாடத்திற்கான கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்தும் 29 ஆம் திகதி வரலாறு, 30 ஆம் திகதி ஆங்கிலம், டிசெம்பர் முதலாம் திகதி, சமயம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளதுடன் 2, 3ஆம் திகதிகளில் ஏனைய பாடங்களுக்கான கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன. (அ-5)

# கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பு

கரவெட்டி கிராய் வயல் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். மேற்படி வயல் பிரதேசத்தினுள் நுழைகின்ற கட்டாக்காலி கால்நடைகள் காலபோகச் செய்கையை சேதப்படுத்தி வருகின்றன.

இவ்வாறாக அத்துமீறி நுழைகின்ற கட்டாக்காலிகள் சிலவற்றை வயல் உரிமையாளர்கள் பிடித்து கரவெட்டி கமக்கார அமைப்பிடம் ஒப்படைத்த பின்னர் குறித்த இக் கால்நடைகளின் உரிமையாளர்களை கமக்கார அமைப்பு எச்சரிக்கை செய்துள்ளது.

ஆயினும் இப்பகுதில் இக் கால்நடைகளின் தொல்லை அதிகரித்து செல்வதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு காலபோகச் செய்கைக்கான மழை போதுமானதாக இல்லாத நிலையில் தாம் பல சிரமங்களின் மத்தியிலே செய்கையை மேற்கொண்டு வருவதாகவும் ஆயினும் இக் கால்நடைகள் நெற் செய்கையை சேதமாக்குவதாகவும் விசனம் விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி நாய்களும் அலைந்து திரிந்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தி வருவதால் விபத்துக்கள் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் வீதிகளால் செல்லும் பாதசாரிகளும் நாய்க்கடிக்கு இலக்காகுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் கட்டாக்காலி கால்நடைகள் மற்றும் நாய்களின் தொல்லைகளை குறைக்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (அ-9-60)








யாழ். அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் நுழைவாயில் திறப்பு விழாவும் பரிசளிப்பும் அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா நாடாவை வெட்டி நுழைவாயிலை திறந்து வைப்பதனையும் மாணவி ஒருவர் பரிசில் பெறுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



திரு. கனகசபை தில்லைநாதன் அவர்களின்

# சேவை நலன் பாராட்டு

Mr. KANAGASABAI THILLAINATHAN
B.Sc.Dip.in.Ed.S.L.T.S-I

எமது கல்லூரியின் உப அதிபர் அவர்கள் தமது சேவைக்காலத்தில் கல்லூரிக்கு அளப்பரிய சேவையை ஆற்றி ஆசிரியப் பணியிலிருந்து 26.11.2013 அன்று ஓய்வு பெறுவதைப் பாராட்டுவதுடன் அவர் தமது ஓய்வுக் காலத்தில் எல்லாம் நலன்களும் பெற்று இன்புற்று வாழ எல்லாம் வல்ல கற்பக விநாயகன் அருள்புரிய வேண்டுமென வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.

சேவைக்கால விபரம்:-

பு/ சாகிரா மத்திய கல்லூரி ஆசிரியர் -21.05.1982- 31.08.1987
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் - 01.09.1987- 31.12.1989
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி பகுதித் தலைவர் - 01.01.1990- 01. 01.1997
யா/ ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி - 02.01.1997- 21.03.2007
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி - 22.03.2007- 10.10.2012
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி உப அதிபர் - 11.10.2012- 25.11.2013

ஆசிரியர் கழகம், ப.மா.ச,
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி.


## INVITATION FOR BIDS

## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/ Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit(Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work(Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Improvements and Repairs of the Sewerage Treatment Plant | 500.00 | 56,000.00 | 90 | 2.79 | C-8 |

1.Bidding will be conducted through National Competitive Bidding Procedure

2.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the Institute for Construction, Training and Development (ICTAD).

3.Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

4.A Complete set of Bidding Documents in English Language may be purchased by interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 2013.11.27 until 2013.12.04. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

5.Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 2013.12.05, late bides will be rejected. Bids will be open at 10.15 hrs at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
**26/11/2013.**


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை
- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:- இல.31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(சி/5541)



குறைந்த கட்டணத்தில்
24 மணி நேர சேவை

Northern Central Hospitals

24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

## நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

### சிறு நீர் தொகுதி சத்திர சிகிச்சை, கற்கள் அகற்றுதல் உட்பட (Urology)



அதி நவீன உபகரணங்கள் கொண்டு சிறு நீரக சத்திர சிகிச்சை நிபுணரால் உடலில் காயமேற்படாது கற்கள் அகற்றுதல் உட்பட சகல சிறு நீர்த்தொகுதி சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

### நரம்பியல் சிகிச்சை (EMG, EEG, Sleep Disorders)



நரம்பியல் நோய்களுக்கு மின்னியல் (EMG,EEG) பரிசோதனை மேற்கொள்ளப் படுவதுடன் நித்திரை குறைபாடுகளுக்கும் 24 மணி நேர (Sleepstudies) சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### லாபறஸ்கோப்பி (Laporoscopy)



நவீன கருவி மூலம் வயிற்றில் சிறு துழை யிட்டு இச்சத்திர சிகிச்கை சத்திர சிகிச்சை நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.
நோயாளி உடனடியாகவே சத்திர சிகிச்சையின் பின்பு வீடு செல்லமுடியும்.

### முறிவு தெறிவு , மூட்டுக்கள் சத்திர சிகிச்சை



வட பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் நொதன் சென்றல் வைத்தியசாலையில் மட்டுமே முறிவு தெறிவு மற்றும் மூட்டு நோய்களுக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் வார மொரு தடவை ஆலோசனை சேவையும் சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது.

(சி-5566)

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 59 சூரி செவ் 8 ல்<br>உயரம்: 145cm<br>தகைமை/தொழில்: கணக்காளர்<br>தொ.இ: B/798 | பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா : 17 ½ செவ் 1 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L / ஆசிரியர்<br>தொ.இ: G/1232 |
| பிறப்பு: 1982 இந்து (Vis)<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 9<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / கணக்காளர்<br>தொ.இ: B/799 | பிறப்பு: 1975 இந்து (Ko)<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா : 41 செவ் 1 ல்<br>தகைமை/தொழில் A/L சுருக்கெழுத்தாளர்<br>தொ.இ: G/1236 |
| பிறப்பு: 1982இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 21 செவ் 12 ல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSC, MA / Programme Officer<br>தொ.இ: B/1333 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>கி.பா : 58 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BFA / பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: G/1241 |
| பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 20<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L / Office Coordinator<br>தொ.இ: B/2299 | பிறப்பு: 1975 இந்து (Siva Kuru)<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா : 24 செவ் 8 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: G/1242 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

# 18 சங்கங்களின் ஆதரவுடன் அரச தாதியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**அரச தாதியர்கள் 18 சங்கங்களின் ஆதரவுடன் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாளையும் நாளை மறுதினமும் நாடளாவிய ரீதியில் மாபெரும் பணிப்பறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இந்தப் பணிப் புறக்கணிப்புக்கு அரசு தாதியர் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலையின் கிளையினரும் பூரண ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் ஸ்ரீநற்குணராஜா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார சேவை வரலாற்றில் தொழில் ரீதியான 16 சேவைகள் ஒன்றிணைந்து கடந்த முதலாம் திகதி மேற்கொண்ட வேலை நிறுத்தம் காரணமாக சுகாதார அதிகாரிகள் நிதி அமைச்சு மற்றும் அரச நிர்வாக அமைச்சு சமர்ப்பித்த கொடுப்பனவு அதிகரிப்பு அறிக்கையை முறையாக கவனத்திலெடுத்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வெற்றி பெறும் வரை தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம் என்று வலியுறுத்தியுள்ள அரசு தாதியர் சங்கத்தின் தாய்ச் சங்கம் ஆறு அம்ச கோரிக்கை ஒன்றை முன்வைத்து இரண்டு நாட்கள் புறக்கணிப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

10 ஆயிரம் ரூபாய்க்கான கடமைத் தடை மற்றும் போக்குவரத்து கொடுப்பனவை வென்றெடுத்தல், மணித்தியாலத்திற்கான ஆகக்குறைந்த மேலதிக நேர கொடுப்பனவை ரூபா 200 ஆல் அதிகரித்தல், முதலாவது கட்ட மாக முதலாம் மற்றும் விசேட வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு தொலைபேசிக் கொடுப்பனவுக்குரிய ரூபா 4 ஆயிரத்தை அதிகரிக்கச் செய்தல், முதலாம் மற்றும் விசேட வகுப்புக்கு சேவைக் காலத்துக்கு ஒருமுறை தீர்வை வரியற்ற வாகன அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றெடுத்தல் ,சுற்று அரச நிரூபம் 7/2008 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி தொழில் நுட்ப சேவையில் சம்பளச் சிக்கல்களை உடனே சரிசெய்தல்.

சுகாதார சேவையில் சராசரியாக கீழ் வகுப்புகளுக்கு 1994-07.01 முதல் 9 வருடங்களில் முதலாம் வகுப்புக்கான உயர்வை வழங்கியுள்ளவாறு தாதி- குறை- நிரப்பு- மேலதிக வைத்திய சேவைகளுக்கும் 9 வருடங்களில் முதலாம் வகுப்புக்கு உயர்வை பெற்றுக் கொள்ளுதல் ஆகிய ஆறு அம்சக் கோரிக்கைகளை வைத்து இந்தப் பணிப் புறக்கணிப்பு போராட்டம் நாடளாவிய ரீதியில் நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

இதற்கு அரச தாதி உத்தியோகத்தர் சங்கம், குறைநிரப்பு வைத்திய சேவை ஒருங்கிணைப்பு அதிகார சபை, அரச வைத்திய ஆய்வு கூட தொழில்நுட்ப விஞ்ஞானிகள் சங்கம், அரச மருந்தியலாளர்கள் சங்கம், அரச பௌதீக சிகிச்சை உத்தியோகத்தர்கள் சங்கம், அரச கதிரியக்க விஞ்ஞான தொழில் நுட்பவியலாளர் சங்கம் , அரச தொழிற்றுறை சிகிச்சை உத்தியோகத்தர் சங்கம், மேலதிக வைத்திய சேவைகள் ஒருங்கி ணைப்பு முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் சேவைகள் பரிசோதகர்கள் சங்கம், சுகாதார சேவைகள் குடம்பி விஞ்ஞான உதவி உத்தியோக த்தர் சங்கம், அரச பல் வடிவமைப்பாளர் சங்கம், அரச கண் தொழில் நுட்பவியலாளர் சங்கம், அரச மூளை மின்னிலை விரிவாளர் சங்கம், பொது மக்கள் சுகா தார இரசாயன கூடவியலாளர் சங் கம், அரச இதய மின் துப்பாளர் சங்கம், அரச பேச்சியல் சிகி ச்சை உத்தியோகத் தர்கள் சங்கம் உள் ளிட்ட 18 சங்கங்கள் இந்தப் பணி ப்புறக் கணிப்பு போராட்ட த்திற்கு ஆதரவு வழங்கவுள்ளதென அரச தாதியர் சங்கத்தின் தாய்ச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். கிளையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ். போதனா வைத்திய சாலையில் முன்னதாகவே சுமார் ஆயிரத்து 100 தாதிய உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறையுள்ள நிலையில் அடிக்கடி இடம்பெறும் இப் பணிப்புறக்க ணிப்பு போராட்டங்களால் நோயாளர்கள் அதிகளவில் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் சுகாதார அமைச்சு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-6)

**நாடளாவிய ரீதியில் சகல வைத்தியசாலைகளிலும் நாளையும் நாளை மறுதினமும் சுகயீன விடுமுறைப் போராட்டம் நடைபெறவுள்ளது. இதில் யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்களும் பங்குபற்றவுள்ளனர்.**

**அத்துடன் அன்றைய தினத்தில் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் மாத்திரமே தாதியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவை வழங்குவர். எனவே நோயாளர்களை அநாவசிய சிரமத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தமது போராட்டம் வெற்றி பெற ஒத்துழைப்பு நல்குமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள் சங்க கிளையினர் அறிவித்துள்ளனர்.**

## மரண அறிவித்தல்

## திரு. கந்தசாமி பரமகுரு

*(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை கோட்டம், முன்னாள் கொத்தணி அதிபர், நாகர் கோவில்)*

ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி பரமகுரு நேற்று (25.11.2013) காலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், திருமதி. ஜெயகுமாரி தயாநிதி (ஆசிரியர், யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), திரு. ஸ்கந்தகுமார் (அமரர்) அவர்களின் அன்புத் தந்தையாரும், திரு. பி.தயாநிதி (கிராம அலுவலர் ஜே/ 403, 402) அவர்களின் அன்பு மாமனாரும், ஜெயகுமரன் (யா/ஹாட்லிக் கல்லூரி) அவர்களின் அன்புப் பேரனும், திரு. தயானந்தகுரு, திரு. சித்திரவேலாயுதகுரு, திரு. விஜயகுமரகுரு, திரு. சதானந்தகுரு, திரு. உமாபதிசிவம், திரு. விமலேந்திரகுமார், திருமதி பத்மலோஜினி, திருமதி தேவரஞ்சிதலோஜினி, திருமதி கமலாதேவி, திருமதி இந்திரா்தேவி, திருமதி மேகலலோஜினி அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று 26.11.2013 அன்று காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் , அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**மருமகன்**

**பொ.தயாநிதி**

**(கிராம அலுவலர் (ஜே/403, ஜே/402)**

**பத்திரகாளி கோயில் வீதி, பருத்தித்துறை.**

MCSL Financial Services Limited

## வாகன விற்பனை

Kilinochchi Branch

| Registration | Make | Model | Year |
|---|---|---|---|
| | MOTOR BIKE | | YOM |
| NPXU 1755 | HONDA | ACTIVA | 2012 |
| NP XH 1850 | HERO HONDA | SPLENDER | 2012 |
| NP XG 1576 | BAJAJ | DISCOVER 150 | 2012 |
| NP HL 2445 | YAMAHA | FAZER 150 | 2012 |
| NP XG 1530 | BAJAJ | DISCOVER 150 | 2012 |
| NP XP 9574 | HERO HONDA | HUNK 150 | 2012 |
| NP XL 2438 | YAMAHA | FAZER 150 | 2012 |
| NP BAE 1087 | HERO HONDA | PLEASURE | 2012 |
| NP XH 0672 | YAMAHA | FAZER 180 | 2012 |
| NP XC 9033 | BAJAJ | DISCOVER 125 | 2012 |
| | TRACTOR | | |
| NP RC 5365 | JOHODEER | 5243 | 2011 |
| NP RC 6290 | SONALIKA | D150RX | 2011 |
| NP GH 4478 | MASSEY | 240 | 1999 |
| 270- 1310 | MASSEY | 135 | |
| | LOAD CARRIER | | |
| NP QY 2346 | MAHINDRA | | 2010 |
| NP PP 5094 | MAHINDRA | GIO | 2010 |
| NP SL 2574 | KUBOTA | K600 | 2011 |
| | HIACE | | |
| 56-5847 | TOYOTA | LH102 | 1995 |
| | HARVESTER | | |
| | MUBOTA | 4L2 2.5 | 2011 |
| | MUBOTA | 4L2 2.5 | 2011 |
| | SINOHA | SUPER 80 | 2011 |
| | TIPPER | | |
| NP LD 3725 | TATA | | 2007 |
| | Lorry/Truck | | |
| NP LJ 7850 | TATA | 713 | 2011 |
| 42-7656 | ISUZU | Canter | 1988 |
| 43-5138 | NISAN | ATLAS | 1992 |

மேற்கூறிய வாகனங்களைப் பார்வையிடல் இல. 06, கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி. தொலைபேசி:- 021 2280078 (தீபன்-0772365660), Manager -0789141148.

பார்வையிடும் நேரம்:-2013.11.25 தொடக்கம் 2013.12.05 திங்கள் வரை

Jaffna Branch

| Regno(s) | Make(s) | Model(s) | YOM |
|---|---|---|---|
| | MOTOR BIKE | | |
| NP WZ -9292 | HONDA | MD 90 | 2011 |
| NP XW -1207 | HONDA | MD 90 - 25Up | 2012 |
| NP BAA -3349 | TVS | XLSHD | 2013 |
| NPWN -9314 | BAJAJ | PULSAR 150 UG4.S | 2011 |
| NP XP -1933 | HERO HONDA | PLEASURE | 2012 |
| NP XC -9016 | BAJAJ | PULSAR 150 UG4.5 | 2011 |
| NP XC -9033 | BAJAJ | DISCOVER 125 | 2011 |
| NP XB -7059 | BAJAJ | PULSAR 150 UG4.5 | 2011 |
| | Lorry/Truck | | |
| NP LD 9283 | Nissan | Double cab truck | 2003 |
| NP PT- 176 | TATA | SUPER ACE | 2012 |
| NE JG 1118 | ISUZU ELF | Cooler- Full body- YC | 1998 |
| NP PU- 2796 | MAHINDRA MAXIMO | MAXXIMO | 2012 |

மேற்கூறிய வாகனங்களை பார்வையிடும் இடம்- 317, மணிக் கூட்டு கோபுர வீதி, (ஆஸ்பத்திரி பின்புறமாக Gnanam Hotel அருகாமை) யாழ்ப்பாணம். தொடர்பு- ஆதி- 077 6738162, 021 2220380

விலை மனுப் பத்திரங்களை ரூ. 100/= (மீளளிக்கப்படாதது) செலுத்துவதன் மூலம் கீழ் வரும் முகவரியிலுள்ள எமது தலைமைக் காரியாலயத்தின் அறவிடல் பகுதியில் அல்லது கிளைக் காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம். விலை மனுக்களை கடித உறையிலிட்டு சீல் செய்து கடித உறையின் இடது புற மேல் மூலையில் வாகன இலக்கத்தைக் குறிப்பிட்டு. முகாமையாளர், அறவிடல் என்று விலாசமிட்டு அனுப்ப வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு கடித மூலம் அல்லது தொலைபேசி மூலம் தகவல் தரப்படும். எனினும் விலை மனுக்கள் கோரப்பட்டுள்ள எந்தவொரு வாகனத்தையும் அதிலிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ளும் பூரண அதிகாரம் MCSL நிறுவனத்துக்கு உண்டு. **விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்களை தற்போதுள்ள நிலையில் பொறுப்பேற்பதும் அவற்றுக்கான சகல இறைவரிப் பாக்கிகளை ஏற்றுக்கொள்வதும் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள:

MCSL Financial Services Limited

(இலங்கை வங்கிக்கும் மேர்ச்சன்ட் வங்கிக்கும் சொந்தமான நிதி நிறுவனம்)

BOC மேர்ச்சண்ட் கட்டடம் 11ஆம் மாடி,

இல. 28,சென் மைக்கல் வீதி, கொழும்பு-03.

தொலைபேசி: 011 - 2 301501 பக்ஸ்: 011 - 4 627850

உடன் தொடர்புகளுக்கு: அருள் - 077 2991810

# கரைச்சி பிரதேச சபையில் நிலவும் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுங்கள்

## தவிசாளரால் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பிவைப்பு

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச சபையில் நிலவும் ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு பிரதேச சபையின் தவிசாளர் நா.வை.குகராசா வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கடித மூலம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

கரைச்சி பிரதசே சபையானது வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் மீள் உருவாக்கம் பெற்றுள்ளது.

இச்சபை தற்போது வளநிலைகள், பொருளாதாரம் மற்றும் சுகாதாரம், வருமானக்கட்டுமான சார் அபிவிருத்தி போன்றவற்றில் குறைந்த ஆளணியினரோடும் மற்றும் பல்வேறு அக,புறநிலைத் தாக்கங்களோடும் பிரதேச மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது.

இச் சபைக்கு 105 இற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் தேவைப்படும் நிலையில் 67 உத்தியோகத்தர்கள் மட்டுமேயுள்ளனர்.

இவர்களில் வருமானவரி அறிவீடு உத்தியோகத்தர் மற்றும் 3 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

இவர்கள் எவரும் இல்லாத நிலையில் தற்போது பளைப் பிரதேச சபையில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உதவியுடனும் பிராந்திய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் உதவியுடனுமே எமது வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

இங்கு வருமானவரி உத்தியோகத்தர் இல்லாத காரணத்தினால் வருமானம் சார் வேலைத் திட்டங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் போதியளவு இல்லாத காரணத்தினால் கிளிநொச்சி நகரப்பகுதி மற்றும் பொதுச் சந்தைப் பகுதி என்பன உள்ளடங்கலாக பல பகுதிகளில் கழிவகற்றல் செயற்பாடுகள் மந்தகதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

தினக்கூலி அடிப்படையில் சுத்திகரிப்பு பணியில் தற்காலிக மாக ஈடுபடும் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி உதவ வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளதோடு, தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் தயாரிக்கப்படுகின்ற வேலைத் திட்டங்களை ஒப்புநோக்கி சரிபார்த்து உறுதிப்படுத்துவதற்கு ஒரு பொறியியலாளரையும் நியமித்து தர வேண்டுமென தாம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-15)




## நிர்வாகத் தெரிவு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை கிளிநொச்சி கனகபுரம் நண்பர்கள் விருந்தகத்தில் ஓய்வுபெற்ற அதிபர் கே.கனகசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக வே.இறைபிள்ளை, செயலாளராக மா.பேரம்பலம், பொருளாளராக கு.யோகேந்திரன், மூத்த துணைத்தலைவர் ம.பத்மநாதன், துணைத் தலைவர் பொன்.தில்லைநாதன், துணைச் செயலாளர் திருமதி இ.அருணாசலம், கணக்கு பரிசோதகராக ஓய்வு பெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் ம.பத்மானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, செயற் குழு உறுப்பினர்களாக 9 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-84)

**வலம்புரி செய்தியை அடுத்து**

# விவசாயிகளுக்கு நீர் வழங்குவதற்கு நடவடிக்கை

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள புதுமுறிப்பு குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் குறிப்பாக சிவநகர் விவசாயிகளுக்கு பாரபட்சமான முறையில் நீர் வழங்கல் நடைபெறுவதாக அண்மையில் செய்தி மூலம் வலம்புரி பத்திரிகை சுட்டிக்காட்டியதை அடுத்து நீர்ப்பாசன பொறியியலாளர் உடனடியாக இந்த விடயத்தில் கவனம் எடுத்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் நேற்றைய தினம் புதுமுறிப்பு கமக்கார அமைப்பு, ஜெயந்தி நகர் கமக்கார அமைப்பு, சிவநகர் கமக்கார அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளை ஒன்று கூட்டி சந்தித்து அவர்களுக்கான பிரச்சினைகளை ஆய்வு செய்து உடனடியாக செய்யக் கூடியவற்றை மேற்கொள்வதற்குரிய ஒழுங்குகளை ஏற்படுத்தியுள்ளார்.

இதனால் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் பொறியியலாளரின் உடனடி நடவடிக்கைக்கும் விவசாயிகள் தமது மகிழ்ச்சியை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இக்குளத்தின் கீழ் நீர்ப்பாசனம் ஏனைய வேலைத் திட்டங்கள் தொடர்பாக இன்றும் நாளையும் நேரடியாக உரிய இடங்களை பார்வையிட்டு அங்கு காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளார்.

இத்தகைய நிலையில் தமக்கான வாழ்வாதாரம் சிறப்படையும் என இப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ம-254)



கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும் இணைந்து நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

## வீதியைப் புனரமைக்குக

(கிளிநொச்சி)

ஜெயந்திநகர் குருகுலத்திற்குப் பின்புறமாக அமைந்துள்ள வீதி புனரமைக்கப்படாமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குண்டும் குழியுமான இவ்வீதியால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் உடனடியாக இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-254)

## உளசமூக மேம்பாட்டு இன்று மாதாந்த கூட்டம்

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவின் உளசமூக மேம்பாட்டு மாதாந்த கூட்டம், இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உளசமூக மேம்பாட்டுக்குழுவின் அங்கத்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்குழுவின் அங்கத்தவர்களாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவ அதிகாரி மா.ஜெயராஜா, கிளிநொச்சி மாவட்ட உளவள அதிகாரி தே.துஷ்யந்தன்,மாவட்ட சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன், பிரதேச செலயக உத்தியோகத்தர்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த உளசமூக மேம்பாட்டுக் குழு மாதாந்தம் தொடர்ச்சியாக கூடி பிரதேச மட்டத்தில் உள்ள உளசமூக பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகிறது.

இதன் மூலம் கரைச்சி பிரதேச செயலக மட்டத்தில் உள்ள உளசமூக பிரச்சினைகள் சிறப்பான முறையில் தீர்த்து வைக்கப்படுகின்றன.(ம)

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில்வரும் கனகபுரத்திலுள்ள லீட்ஸ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான 3 நாள் பயிற்சி செயலமர்வு கடந்த 22,23,24 ஆகிய திகதிகளில் நடைபெற்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளையும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவும் , கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் அனர்த்த முகாமைத்துவ குழுவினரும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தியுள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் பத்மநாதன பிரணவன் , கிளிநொச்சி மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்களான சிவஞானசுந்தரம் நிலாகினி , தில்லைநாதன் சிந்து ஆகியோருடன் பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின்உறுப்பினர்கள் 3 நாள செயலமர்விலும் கலந்து கொண்டார்கள்.




அனர்த்தங்களையும் அவற்றை எதிர்கொள்ளும் விதங்கள் தொடர் பாகவும் இம் 3 நாள் செயலமர்வில் கலந்துரையாடப்பட்டது.

பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவினரால் நடத்தப்பட்ட இந் நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேல், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரி பத்மநாதன் சுதர்சன் , இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி கிளைத் தலைவர் எஸ். தர்மரட்ணம் , கனகபுரம் மகாவித்தியாலய அதிபர் எஸ். சேதுபதி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-254)

# பிரசவத்தை இலகுவாக்கும் கருவி

பிரசவத்தை எளிதாக்கும் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் இக் கருவி உலக சுகாதார நிறுவனத்தின் விருதையும் பெற்றுள்ளது.


ஆர்ஜென்ரீனாவை சேர்ந்த கார் திருத்துநரான ஜோர்ஜ் ஓடன் என்பவரின் சிந்தனையில் உருவாகியுள்ளது இக் கருவி. இவர் நண்பர்களுடன்விருந்துண்ட போது திராட்சை இரச போத்தலினுள் சிறிய பொருள் போய்விட்டது. ஆனால் பந்தயத்திற்காக ஜோர்ஜ் போத்தலின உள்ளே பிளாஸ்ரிக் பையை நுழைத்தபின் ஊதிப் பெரிதாக்கியதில் சிறிய பொருள் பிளாஸ்ரிக் பைக்குள் மாட்டிக் கொண்டு. இழுத்ததும் அழகாக வெளியில் வந்துவிட்டது. அன்று இரவு தூக்கத்திலிருந்துதிடுமென விழித்த ஜோர்ஜ் தனது மனைவியிடம் சம்பவத்தை விபரித்த பினனா குழந்தையை இந்த பிளாஸ்ரிக பை முறையில் வெளியில் எடுப்பது எளிதான பிரசவ முறை யாக இருக்கும் என்று கூறினார்.

அடுத்தநாள் காலையில் ஜோர்ஜ் அவரது நண்பருடன் ஒரு மகப்பேறு மருத்துவரை சந்தித்து புதிய கருவியை பற்றி கூறினார். அந்த மருத்துவர் ஜோர்ஜின் புதிய கருவி செயறபாட்டை தனது மருத்துவமனையில் சோதனை செய்து பார்க்க உதவினார்.

இதையடுத்து அந்த மருத்துவர் யூரியூப் இணையதளத்தில் சோதனையை வெளியிட்டுபின்னர் ஜோர்ஜை 2008ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் மகப்பேறு துறையின் தலைவர் வைத்தியர் மரியோ மரியால்டியை சந்தித்து பேச வைத்தார். காப்பி குடிக்கும் நேரத்தில் 10 நமிடங்கள் தன்னை சந்திக்க அனுமதி அளித்த டாக்டர் மரியோ கண்டுபிடிப்பை பார்த்து 2 மணி நேரம் ஜோர்ஜ் உடன் உரையாடிய பின்னர் இது குறித்த தகவல்களை வெளியிட்டிருந்தார்.

அதில் மகப்பேறு காலங்களில் பெண்கள் பல சிக்கல்களை சந்திகின்றனர். அவற்றில் ஒன்று பிரசவ நேரத்தில் குழந்தை கருப்பைக்குள் சிக்கிக்கொள்வதாகும்.

இதனால் குழந்தை அறுவை சிகிச்சை மூலமாக வெளி யில் எடுக்கப்படுகிறது. இந்த சிக்கலான நேரத் தில் மருத்துவர் என்ன பரச்சினை, அதை எப்படி சரிசெய்வது என்று சரியாக முடிவெடுக்கவிலலை என்றால் தாயும் சேயும் இறப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது.



சிக்கலான பிரசவ நேரத்தில் உபயோகப்படுத்தும் வகையில எளிய கருவி இருந்தால் மருத்துவர்கள் பிரசவங்களை எளிதாகவும் விரைவாகவும் செய்ய முடியும். ஓடன் கருவி என்று பெயரிடப்பட்ட இந்த கருவி ஆர்ஜென்ரீனாவை சேர்ந்த ஜோர்ஜ ஓடன் என்ற 59 வயது சிறிய பொருள் திருத்துபவா் கண்டுபிடித்துள்ளார். இதன்மூலம் எளிதாக பிரசவம் நடக்க கர்ப்பிணி பெண்களுக்கு மருத்துவர்கள் உதவ முடியும். இதில் கையால் பிடிக்கும் வகை யில் உள்ள ஒரு பிளாஸ்ரிக் பை உள்ளது.

உராய்வை குறைக்க லூப்ரிகன்ட் செலுத்தப்பட்ட இந்த பை காற்று நிரப்பும் வகையில் உள் ளது. இதன்மூலம் சிக்கலான பிரசவத்தல் குழந்தை வெளி வராத போது குழந்தையின் தலையை சுற்றி இந்த பிளாஸ்ரிக் பையை வைத்து காற்றால் நிரப்ப வேண்டும். இதனால்தலையை சுற்றி பிளாஸ்ரிக் பை கெட்டியாக பிடித்துக்கொள்ளும, பின்னர் மெதுவாக வெளியில் இழுத்தால் குழந்தை பத்திரமாக பிரசவிக்கப்படும்.

இதன்மூலம் மிக சிக்கலான பிரசவங்கள் கூட எளிதாக நடைபெறுகிறது. இந்த கருவியை உலக சுகாதார நிறுவனம் ஆர்ஜென்ரீனா கர்ப்பிணி பெண்களிடம் சோதித்துப் பார்த்ததில், சுகமான பிரசவம் நடந்துள்ளது.

இதனால் சிசேரியன் அறுவை சிகிச்சைகள் குறையும். இந்த முறையை இந்தியா, சீனா மற்றும் தெற்கு ஆபிரிக்காவில் பயன்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் பிரசவ நேரத்தில் ஏற்படும் சிக்கல்களினால் இறக்கும் குழந்தைகள் மற்றும் பெண்களை காப்பாற்ற முடியும்.

ஒரு ஆண்டில் பிரசவ நேர சிக்கல்களினால் பிறக்கும் குழந்தைகளில் 56 இலட்சம் குழந் தைகளும் 2இலட்சத்து 60ஆயிரம பெண்களும் இறக்கிறார்கள். இதைத தயாரிக்க 50 டொலர்கள் செலவாகிறது. இந்த கருவியை கனடாவை சேர்ந்த கிரான்ட் சேலஞ்சஸ் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பென்டன் டிக்கின்சன் கம்பனியுடன சேர்ந்து தயாரிக்க உள்ளது. ஏழை நாடுகளுக்கு இந்த கருவி அதிக அளவில் பயனுள்ளதாக இருக்கும என குறிப்பிடப்பட்டுள்ளது.




# இங்கு தமிழர்களுக்கு பிரச்சினையை உருவாக்கியது பிரித்தானியாவே

## யுத்தக் குற்றத்தை மறுக்கிறோம்–சம்பிக்க

(கொழும்பு)

இந்தியா உள்ளிட்ட மேற்கு நாடுகளுடன் இணைந்து தமிழீழத்தை உருவாக்கலாம் என்று தமிழ் சமூகத்தின் சில தரப்புக்கள் கருதுகின்றன.

யுத்தத்தினால் ஈழத்தை அடைய முடியும் என்று எண்ணியவர்களே தற்போது மேற்கு நாடுகளைக் கொண்டு இதனை அடையலாம் என்று எண்ணுகின்றனர் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தொவிக்கையில்,

பிரிட்டன் சுமத்தும் யுத்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கின்றோம். ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பிரித்தானியா உள்ளிட்ட மேற்கு நாடுகளே யுத்தக்குற்றங்களை செய்துள்ளன.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க இலங்கைக்கு வருகை தந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன்பொதுநலவாய விதிமுறைமைகளை மீறியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி பிரித்தானியாவுக்கு சென்று வட அயர்லாந்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து உரையாற்றினால் அதனை கமரூன் தலைமையிலான பிரித்தானியா எவ்வாறு நோக்கும்.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு பரச்சினையை பிரித்தானியாவே உருவாக்கியது. அவர்கள் முதன் முதலாக இந்த நாட்டுக்குள் வரும் போது நாட்டில் பிரிவினைவாத பிரச்சினை இருக்கவில்லை.

தமிழ் பிரபுக்களுக்கு அதிக வரப்பிரசாதங்களை வழங்கி இந்தப் பிரச்சினையை பிரித்தானியாவே ஏற்படுத்தியது.

தற்போது யுத்தக் குற்றச்சாட்டுக்கள குறித்து பிரித்தானியா பேசுகின்றது. இலங்கையில் பிரித்தானியா இருந்த காலத்தில் சுதந்திரத்துக்காக போராடியவர்களை எவ்வாறு பிரிட்டன் நசுக்கியது என்று எங்களுக்குத் தெரியும். யுத்தக் குற்றங்களை பிரித்தானியாவே மேற்கொண்டுள்ளது.

அது மட்டுமல்ல, இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றுள்ளதாக கூறுவதை நாங்கள் முழுமையாக நிராகரிக்கின்றோம்.

பிரிட்டன் உள்ளிட்ட மேற்கு நாடுகளே ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை, இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வந்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பொதுநலவாய விதி முறைமைகளை மீறி சம்பந்தமில்லாத விடயம் ஒன்றை கூறிச் சென்றுள்ளார்.

பிரித்தானிய பிரதமர் இலங்கை வருவதறகு முன்னர் புலி ஆதரவு புலம்பெயர் மக்களின் ஏழு குழுக்களை சந்தித்து விட்டே இங்கு வந்தார்.

இந்தியா உள்ளிட்ட மேற்கு நாடுகளுடன் இணைந்து தமிழ் ஈழத்தை உருவாக்கலாம் என்று தமிழ் சமூகத்தின் சில தரப்புக்கள் கருதுகின்றன.

இந்தியாவின் தமிழ் நாட்டைக் கொண்டு ஈழத்தை அடையலாம் என்று எண்ணுகின்றனர். யுத்தத்தினால் அதனை செய்ய முயறசித்தனர். ஆனால் முடியவிலலை. தற்போது இவ்வாறான முயற்சிகளை முன்னெடுத்துளளனர் என்றார். (அ-2)

# இவ் ஆண்டு வாக்காளர் விபரத்தின்படி அடுத்த ஆண்டில் தேர்தல் நடைபெறும்

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டு நடத்தப்படும் எந்தத் தேர்தலும் 2013 ஆம் ஆண்டின் வாக்காளர் அட்டவணைப்படியே நடத்தப்படும் என பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஒன்றை நடத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடப்பட்டால், 2013 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர் அட்டவணைப்படியன்றி 2012 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர் அட்டவணைப்படியே தேர்தல் நடத்தப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டின் வாக்கா ளர் பெயர் அட்டவணை டிசெம்பர் மாதம 31 ஆம் திகதியன்று வெளியாகும்.

தற்போது இந்தப் பணிகள் குறிப்பிடத்தக்க அளவு பூர்த்தி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர் தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்களுக்காக 2013 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர் அட்டவணை பயன்படுத்தப்படு மென்றும் அவர் தொடர்ந்து தெரிவத்தார. (அ-2)

# சனல் 4 ஊடகவியலாளர்களை ஸ்ரீகொத்தாவுக்கு அழைத்தது தவறு

(கொழும்பு)

சனல் 4 ஊடகவியலாளர்களை ஐ.தே. கட்சி தலைமையகமான ஸ்ரீகொத்தாவிற்கு அழைத்துச் சென்றமையானது தேசத்துரோக செயலாகும் என தொழில் அமைச்சர் காமினி லொக்குகே சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே அமைச்சர் காமினி லொக்குகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபையில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையல்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அரசியல் சுதந்திரம் ஜனாதிபதியினாலேயே இன்று கிடைத்துள்ளதாக கூறிய அமைச்சர்.

ஐ.தே.கட்சியினர் சனல் 4 ஊடகவியலாளர்களிடம் இலங்கைக்கு எதிரான தகவல்களை வழங்குவதற்கே ஸ்ரீகொத்தாவிற்கு அழைத்து சென்றுள்ளது என்றார். இதன் மூலம் ஐ.தே. கட்சியினர் நாட்டுக்கு தேசத்ரோகம் செய்துள்ளனர். (அ-2)

# விருது வழங்கலும் சஞ்சிகை வெளியீடும்

(கொழும்பு)

இணுவில் ஒலி சஞ்சிகை நிறுவனத்தால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் தாயக ஒலி சஞ்சிகையின் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் சு.செல்லத்துரையின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக லண்டன் வாழ் இரா.உதயணன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரத்தினம், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் உடுவை எஸ்.தில்லை நடராசா, கொழும்பு இந்துக் கல்லூரி அதிபர் ஐ.இராசரத்தினம், கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி சசிதேவி சிவனேசன், இலக்கிய புரவலர் வைத்திய கலாநிதி தாஸிம் அஹமது ஆகியோரும் கௌரவ விருந்தினராகலண்டன்வாழ்வைத்திய கலாநிதி சேர்.என்.விவேகானந்தாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது வாழ்த்துரைகளை நாவலர் நற்பணி மன்றத் தலைவர் ந.கருணை ஆனந்தன், அண்ணா தொழிலக அதிபர் எஸ்.பி.நடராசா ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-5)

# வாழ்வின் அழகிய தருணங்கள்!



துன்பத்தை மகிழ்ச்சியாக்குவோமே!


விலங்குகள் எப்படி வாழ வேண்டுமென்ற தன்மையை இயற்கை நிர்ணயம் செய்திருக்கிறது. அவை அந்த வாழ்க்கை நிலையிலிருந்து சற்றும் மாறுபட்டு வாழ்வதில்லை. ஆனால், மனிதர்களுக்கோ, இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரைமுறை எதுவும் வகுக்கப்படவில்லை. அவர்கள் விரும்பம் போல வாழ்ந்து கொள்ளும்படியாக சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தங்களது சுதந்திரத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ளாது அதனை போராட்டமாக உருவாக்கிக் கொள்கிறார்கள். இதனால் பல இழப்புக்களை சந்திக்கின்றனர். தங்களுக்கென தரப்பட்டுள்ள சுதந்திரத்தை சரியாக பயன்படுத்தி வாழக்கையை முறைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அன்பு, அறிவு, பணம், இன்பம் என மனிதர்கள் தங்களது தேவைகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இவற்றை பூர்த்தி செய்து கொள்வதன் மூலம் அவர்கள் மகிழ்ச்சியைக் காண்கிறார்கள். ஆக, மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே் தேவைகளை அடைந்துதான் பெற வேண்டும் என்பதில்லை. மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று மனதில் பரிபூரணமாக நினைத்தாலே போதும். அந்த மகிழ்ச்சி தானாகவே கிடைத்துவிடும். எந்தவொரு துன்பமான சூழ்நிலையிலும் மகிழ்ச்சியுடன்தான் இருக்க வேண்டும் என வரையறுத்துக் கொள்ளுங்கள். அதன்படியே வாழ்ந்தால் எல்லா தேவைகளும் உங்களது திறமைக்கு ஏற்ப தாமாகவே கிடைத்துவிடும்.

பசுவதை ஏன் கூடாது?

நமது கலாச்சாரத்தில் பசு, பாம்பு மற்றும் காகம் ஆகிய மூன்று உயிரினங்களுக்கும் தனி இடம் தரப்பட்டுள்ளது. உடலின் பரிணாம வளர்ச்சியைப் பார்க்கும்போது, குரங்கு நமக்கு மிக அருகில் இருக்கிறது. ஆனால், ஆத்மாவின் பரிணாமவளர்ச்சியைப் பார்க்கும் போது இம் மூன்றுமே நமக்கு அருகாமையில்

## உயிரினங்களில் பசு மட்டுமே மனிதனைப்போல் ஆழமான உணர்வுகளைக் கொண்டுள்ளது



உள்ளன. இந்த உயிர்களைக் கொல்வது என்பது கிட்டத்தட்ட மனித உயிர்களைக் கொல்வது போலத்தான். கிராமங்களில் இன்னமும் மனிதர்கள் பசுக்களுடன் மிக ஆழமான உறவு வைத்துள்ளனர். உயிரினங்களில் பசு மட்டுமே மனிதனைப்போல் ஆழமான உணர்வுகளைக் கொண்டுள்ளது. நீங்கள் துக்கமாக இருந்தால் பசு உங்களுக்காக உண்மையாகவே கண்ணீர் விடும்.

இயற்கையில் எந்த வன விலங்கைத் தொட்டாலும் எதிர்ச் செயல் புரியும். ஆனால், நளினமாக கையாண்டால் விஷப்பாம்புகூட எதிர்ப்பினைக் காட்டுவதில்லை. ஆன்மிக சக்தி உள்ள இடங்களை நாடி பாம்புகள் தானாகவே வந்துவிடும். சில யோகிகள் பாம்பு மற்றும் பசுவிற்கு பிறவிச்சுழற்சியிலிருந்து விடுதலை அளித்த சம்பவங்களும் உண்டு. மற்ற உயிரினங்களை அப்படி விடுவிக்க முடியாது. பசுவையோ, பா மையோ தெரிந்தோ, தெரியாமலோ கொல்ல நேர்ந்தால் மனிதர்களைப் புதைப்பதுபோல அதைப் புதைக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. (தொடரும்)

ஆன்மீகம் 49

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இந்தியாவின் பிடியிலிருந்து விலகி சர்வதேச மயப்படும் இலங். விவகாரம்

...மழை விட்டாலும் தூவானம் விடவில்லை என்று சொல்வார்கள் இலங்கையில் நடந்து முடிந்துள்ள பொதுநலவாய மாநாடு தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு இந்த நிலைமையிலேயே இருக்கின்றது.

அதுமட்டுமல்லாது, பிராந்திய வல்லரசு என்ற அடிப்படையில் பாரதத்தின் பிடிக்குள் அடங்கியிருந்த இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம், இந்திய அரசிடமிருந்து கைநழுவி சர்வதேசமயப்படுகின்றதா என்ற சந்தேகமும், நடந்து முடிந்துள்ள பொதுநலவாய மாநாட்டையடுத்து எழுந்துள்ளது.

**கொழும்பு மாநாட்டுத் தலையிடி**

பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடு என்ற வகையில் அந்தஸ்து ரீதியாக கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டிய தேவை இந்தியப் பிரதமருக்கு இருந்தது. ஆயினும் இந்தியப் பிரதமர் அதில் கலந்து கொள்ளக்கூடாது என்ற கோரிக்கை ஒரு அரசியல் பேரலையாக தமிழ்நாட்டில் இருந்து எழுந்து மத்திய அரசை மோதியிருந்தது. இதனால் இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்வதா இல்லையா என்ற பெரியதொரு பிரச்சினை புதுடில்லியின் அரச மட்டத்தில் ஏற்பட்டிருந்தது. இந்தப் பிரச்சினை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு பெரும் தலையிடியைக் கொடுத்திருந்தது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன, அதனால் கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை இந்திய அரசு புறக்கணிக்க வேண்டும் என்று தமிழக சட்டசபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக கருணாநிதியும் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகளும் குரல் கொடுத்து, இந்த கோரிக்கையை வலியுறுத்தியிருந்தன.

இந்த அழுத்தத்தின் காரணமாக பிரதமர் மன்மோகன்சிங் பொதுநலவாய மாநாட்டுக்குச் செல்லாது விட்டிருந்த போதிலும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையிலான உயர்மட்டக்குழுவொன்றின் மூலம், இந்தியா அதில் கலந்து கொள்வது என தீர்மானித்து அந்தக் குழு கொழும்பு சென்றிருந்தது. இப்போது பொதுநலவாய மாநாடு நடந்து முடிந்துவிட்டது. இருந்த போதிலும், அதில் இந்தியா கலந்து கொண்டமைக்கு எதிரான அலைகள் இன்னமும ஓய்ந்தபாடாகத் தெரியவில்லை.

**மத்திய அரசுக்கு எதிராக வழக்கு**

தமிழக சட்டசபையில் ஏகமதனாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அதையும் மீறி, இந்தியா இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்டமையானது, வரம்பு மீறிய செயல் என கூறி, உச்சநீதிமன்ற வழக்கறிஞர்களான சுந்தரவதனம், ராஜேந்திரன் மற்றும் டிராபிக் ராமசாமி ஆகியோர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

இலங்கையில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் கலந்துகொள்வது என்று மத்திய அரசு எடுத்த முடிவும், வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் மாநாட்டில் கலந்து கொண்டதும் இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர்கள் கோரியிருக்கின்றார்கள்.

கடந்த 1994ஆம் ஆண்டு நடைபெற்ற எஸ்.ஆர்.பொம்மை வழக்கில், அடிப்படை கட்டமைப்புகளை மீறாது மத்திய அரசு செயற்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. அதன் அடிப்படையில், தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய பின்னரும, மக்களின் போராட்டங்களைக் கருத்தில் கொள்ளாது, தமிழகத்தின் பிரதிநிதிகளை மத்திய அரசு கலந்து ஆலோசிக்காது பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள முடிவெடுத்தது என்று இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர்கள் வாதிடுகின்றார்கள்.

இனி இலங்கை குறித்த வெளியுறவு தொடர்பான விடயங்களை தமிழ்நாடு அரசு அல்லது தமிழ் பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசித்த பின்னரே முடிவெடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்பதற்காக நாங்கள் உச்சநீதிமன்றத்தை நாடியிருக்கின்றோம் என்று. இந்த வழக்கின் மனுதாரராக ளான வழக்கறிஞர்கள் சுந்தரவதனன், ராஜாராமன் ஆகியோர் தெரிவித்திருக்கின்றனர்.



**இந்தியா ஏன் கலந்து கொள்ளவில்லை?**

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கின்ற முக்கியமான பெரிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவின் அயல் நாடாகிய இலங்கையில் அந்த அமைப்பின் மாநாடு நடக்கும்போது, அதில் கலந்துகொள்ளாது இருப்பதற்கு, இந்தியாவுக்கு வலுவான காரணங்கள் இருக்க வேண்டும். மாநாடு நடைபெறுகின்ற பிராந்தியத்தின் வல்லரசு என்ற வகையிலும் இந்தியா அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டிய கட்டாய தேவை எழுந்திருந்தது.

ஆயினும், மனித உரிமை நிலைமைகளில் இலங்கை சர்வதேச மட்டத்தில் பின்னடைந்திருப்பதனால், அதற்கு அழுத்தம் கொடுகக்கும் வகையில் அங்கு நடைபெறுகின்ற இந்த முக்கியமான கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்பதே தமிழ்நாட்டின் அரசியல் நிலைப்பாடாகும். தமிழ்நாட்டிலிருந்து எழுந்திருந்த அழுத்தம் காரணமாகவே இந்தியப் பிரதமர் இந்த மாநாட்டைப் புறக்கணித்திருந்தார். புறக்கணித்திருந்தார் என்று சொல்வதிலும் பார்க்க, போகாது ஒதுங்கியிருந்தார் என்பதே பொருத்தமானதாகும்.

ஏனெனில், மாநாட்டை அவர் புறக்கணித்திருந்தால், அதற்கான காரணத்தை இந்திய அரசு வெளியிட்டிருக்கும். வெளியிட்டிருக்க வேண்டும். பொதுநலவாய மாநாட்டிற்கு வரப்போவதில்லை என்பதை இந்தியப் பிரதமர் இலங்கை அரசுக்கு அறிவித்திருந்த போதிலும், அதற்கான காரணம் என்ன என்பதை அவர் தெரிவிக்கவில்லை என்று இலங்கை கூறியிருந்தது.

உள்நாட்டு அரசியல் காரணங்களினாலேயே கொழும்பில் நடக்கும் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளாதிருக்க முடிவு செய்திருந்ததாக இலங்கையின் வெளியுறவு அமைச்சரான ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது.

இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தை உண்மையிலேயே இந்தியா பொதுநலவாய மாநாட்டுடன் சம்பந்தப்படுத்தி, அதன காரணமாக, அதில் கலந்துகொள்ளாதிருந்திருந்தால், அந்த காரணத்தை இந்திய அரசு வெளிப்படையாகவே கூறியிருக்கும் - கூறியிருக்க வேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை.

**தமிழ்நாட்டின் அரசியல் செல்வாக்கு**

மாறாக, மத்திய அரசின் மீது தமிழ் நாடு கொண்டுள்ள அரசியல் செல்வாக்கு காரணமாக, தமிழ் நாட்டு சட்ட சபையில் மேற்கொள்ளப்பட்ட ஏகமனதான தீர்மானத்திற்கு அடங்கிப் போக வேண்டியதயிற்று. இதன் காரணமாகவே, இந்தியப் பிரதமர் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது.

இந்திய மத்திய அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடுதான், இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தை அதன் பிடியிலிருந்து கைநழுவிச் செல்வதற்கு வழி வகுத்திருக்கின்றது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

இந்தியா ஒரு பெரிய நாடு. அதனை ஓர் உபகண்டம் என்றுகூடச் சொல்வார்கள். அந்த அளவு பெரிய நாடாக இருந்தபோதிலும், இந்திய மத்திய அரசாங்கமானது, வலுவான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றதா என்று வினவத்தக்க வகையில் இனப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட- பின்னடைந்துள்ள இலங்கையின் மனித உரிமை விவகாரத்தைக் கையாண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஏனெனில், இலங்கை விடயத்தில் இந்திய மத்திய அரசு தமிழ் நாட்டின் விருப்பு வெறுப்புகள், அரசியல் முடிவுகளைக் கடந்து செயற்படாத ஒரு போக்கையே கைக்கொண்டு வருகின்றது. (தொடரும்)

(செ.சிறிதரன்)




# தந்தையின் அறிவுரை

முன்னொரு காலத்தில் திருடன் ஒருவன் இருந்தான். தன் மகன் ராசப்பாவையும் திருட்டுத் தொழிலில் வல்லவனாக வளர்த்தான். தந்தை திருடன் இறக்கும் நேரம் வந்தது.

"மகனே! நீ திருட்டுத் தொழிலில் மேலும் மேலும் வல்லவனாக வேண்டும். நான் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொள்.

எங்கேனும் பக்திச் சொற்பொழிவு, இசை நிகழ்ச்சிகள் நடந்தால் அங்கு போகாதே. நீ அங்கே இருக்க வேண்டிய சூழ்நிலை வந்தால் ஏதும் காதில் விழாதபடி உன் காதுகளைப் பஞ்சுகளால் அடைத்துக்கொள். இல்லையெனில், அந்த நல்ல வார்த்தைகள் உன் மனதை மாற்றமடையச் செய்துவிடும்," என்றான்.

"அப்படியே செய்கிறேன்," என்றான் மகன்.

தந்தையின் அறியுரைப்படியே நடந்து வந்தான் ராசப்பா.

ஒருமுறை திருடிவிட்டு திரும்பிக் கொண்டிருந்தான்.

ஓரிடத்தில் மக்கள் கூட்டமாக இருப்பதைக் கண்டான்.


என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காக அருகில் சென்றான்.

அங்கே மகாவீரர், ஒரு மேடையில் அமர்ந்து மக்களுக்கு அறிவுரை வழங்கிக கொண்டிருந்தார்.

தன் தந்தை சொன்னது உடனே நினைவுக்கு வந்தது.

தன் இரு கைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டு அங்கிருந்து நடக்கத் தொடங்கினான்.

அப்பொழுது முள் ஒன்று அவன் காலில்



தைத்தது. குனிந்த அவன் தன் ஒரு கையால் முள்ளைப் பிடுங்கிவிட்டு மீண்டும் காதைப் பொத்திக் கொண்டான்.

அந்த சொற்ப நேரத்தில்-

"தேவர்களுக்கு நிழல் விழாது. அவர்கள் கால்கள் நிலத்தில் படியாது," என்று மகாவீரர் பேசியது அவன் செவியில் விழுந்தது.

சில நாட்களில் முக்கிய திருட்டு ஒன்றைச் செய்தபோது வீரர்களிடம் சிக்கிக் கொண்டான். அவன் செய்த திருட்டை எல்லாம் அறிய வீரர்கள் அவனை அடித்துத் துன்புறுத்தினர்.

கல்லுளி மங்கனான அவனோ, வாய்திறக்கவே இல்லை. அவனிடமிருந்து உண்மையை அறிய அதிகாரிகள் சூழ்ச்சி செய்தனர்.

மயக்க மருந்து தந்து அவர்கள் அவனை ஓர் அழகான பூஞ்சோலையில் கிடத்தினர். மயக்கம் தெளிந்த ராசப்பா, தான் இருந்த இனிய சூழலைப் பார்த்து வியப்பு அடைந்தான்.

"நான் எங்கே இருக்கிறேன்?" என்று அங்கு நின்றவர்களைக் கேட்டான்.

அவர்களில் ஒருவர், "நீங்கள் இப்பொழுது தேவலோகத்தில் இருக்கிறீர்கள். இங்கே நீங்கள் என்ன நினைத்தாலும் உடனே நிறைவேறும். நீங்கள் எங்களைப் போல மகிழ்ச்சியாக இருக்கலாம். நாங்கள் தேவலோக மைந்தர்கள். இங்கே யாரும் பொய் சொல்லக் கூடாது. பொய் சொன்னால் உடனே இந்த உலகத்தை விட்டுப் போய்விடுவர். நீங்கள் யார்? பூவுலகில் என்னென்ன செய்தீர்கள்? சொல்லுங்கள்," என்று இனிமையாகக் கேட்டனர்.

உடனே ராசப்பா அவர்களைப் பார்த்தான். அவர்கள் கால்கள் தரையில் இருப்பதையும், நிழல் விழுவதையும் பார்த்தான.

மகாவீரர் சொன்னதைக் கேட்டது. அப்போது அவன் நினைவுக்கு வந்தது. "இவர்கள் தேவர்கள் அல்லர் மனிதர்கள் தான். என்னை ஏமாற்ற முயற்சி செய்கின்றனர்" என்ற உண்மை அவனுக்குப் புரிந்தது.

"ஆ! மகாவீரர் பேசியதைச் சிறிது நேரம் கேட்டதாலேயே இவர்கள் என்னை ஏமாற்றுவதைக் கண்டுபிடிக்க முடிந்ததே... அவர் பேசுவதை நான் முழுமையாகக் கேட்டிருந்தால் எத்தனை நன்மைகள் உண்டாகி இருக்கும" என்று நினைத்து உள்ளம் கலங்கினான்.

அவர்களைப் பார்த்து, "நீங்கள் என்னை ஏமாற்றுகிறீர்கள். இது சொர்க்கம் அல்ல. நீங்களும் தேவலேக மைந்தர்கள் அல்ல. எனக்கு மட்டும் விடுதலை கிடைத்தால் நான் திருட்டுத் தொழிலையே செய்ய மாட்டேன். மகாவீரரின் சீடனாகி அவர் அருளுரைகளை எப்பொழுதும் கேட்டுக் கொண்டு அவர் திருவடிகளில் விழுந்து கிடப்பேன்," என்று உணர்ச்சியுடன் சொன்னான்.

இவனது பேச்சு அரசனின் காதுகளில் விழுந்தது. ராசப்பாவை அழைத்து விசாரித்தான் அரசன். நடந்த நிகழ்ச்சிகளை அறிந்த அரசன் அவனை விடுதலை செய்தான். அவனும் திருட்டுத் தொழிலை விட்டு விட்டு மகா வீரரின் சீடர்களில் ஒருவன் ஆனான்.




- 1778-ஹவாயன் தீவுகளில் அமைந்துள்ள மாவுய் தீவில் இறங்கிய முதல் ஐரோப்பியன் கப்டன் ஜேம்ஸ் குக்.
- 1842-நோட்ரெடேம் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1922-எகிப்திய மன்னன் துட்டன்காமுன் என்பவனின் கல்லறைக்குள் ஹவார்ட் கார்ட்டர் மற்றும் கார்னாவன் பிரபு ஆகியோர் சென்றனர் 3000 ஆண்டுகளுக்குப் பின்னர் அதற்குள் சென்ற முதல் மனிதர்கள் இவர்களே.
- 1941-பிரான்சிடமிருந்து லெபனான் ஒருதலைப் பட்சமாக விடுதலையைப் பிரகடனப்படுத்தியது.
- 1941-இரண்டாம் உலகப்போர்: ஆறு யப்பானிய விமானங்கள் தொலைத் தொடர்புகள் அற்ற நிலையில் யப்பானின் இத்தோகபு குடாவிலிருந்து பேர்ள் துறைமுகத்தை தாக்கியழிக்கப் புறப்பட்டன.
- 1942-நோர்வேயைச் சேர்ந்த 572 யூதர்கள் ஜேர்மனியர்களினால் போலந்தின் ஓஸ்விட்ச் நகரில் உள்ள யூத முகாமுக்கு நாடுகடத்தப்பட்டனர். இவர்களில் 25 பேரே தப்பினர்.
- 1949-இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- 1950-மக்கள் சீனக் குடியரசின் படைகள் வட கொரியாவினுள் நுழைந்து தென்கொரியா மற்றும் அமெரிக்கப் படைகள் மீது பெரும் தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1957-சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவுகளைத் தீயிடும் போராட்டத்தை தந்தை பெரியார் ஆரம்பித்து வைத்தார்.
- 1965-சகாரா பாலை வனத்தில் பிரான்ஸ் தனது ஆஸ்டெரிக்ஸ் 1- என்ற முதலாவது செய்மதியை விண்ணுக்கு அனுப்பியது.
- 2001-நேபாளத்தில் மன்னர் கயனேந்திரா அவசர காலச் சட்டத்தை பிறப்பித்தார்.
- 2002-இந்தியாவின் நாகாலந்து மாநிலத்தில் தனி நாடு கோரும் அமைப்புக்களின் மீதான தடை நீக்கப்பட்டது.


**பிறப்புக்கள்**

- 1936- லலித் அத்துலத் முதலி, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் (இ.1993)
- 1939-அப்துல்லா அகமது படாவி, மலேசியப் பிரதமர்
- 1939-டீனா டர்னர், அமெரிக்க ராக் அன்ரோல் இசைக் கலைஞர்
- 1948-எலிசபெத் பிளாக்பர்ன், நோபல் பரிசு பெற்றவர்
- 1948-வி.கே.பஞ்சமூர்த்தி, ஈழத்தினன் நாதஸ்வரக் கலைஞர்
- 1954- வேலுப்பிள்ளை பிரகாகரன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்

**இறப்புக்கள்**

- 1930-சேர் பொன்னம்பலம் இராமநாதன், இலங்கையின் தமிழ்த் தலைவர் (பி.1851)

**வேலுப்பிள்ளை பிரபாகரன்**



தமிழீழத்தின் தேசியத் தலைவர் என அழைக்கப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர், வேலுப்பிள்ளை பிரபாகரன் 1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி திருவேங்கடம் வேலுப்பிள்ளை, பார்வதி அம்மாள் ஆகியோருக்கு மகனாக யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் பிறந்தார்.

இவர் 1972 ஆம் ஆண்டு தனது 18 ஆவது வயதில் புதிய தமிழ்ப் புலிகள் என்னும் அமைப்பை ஆரம்பித்தார். தமிழர் விடுதலைக்கான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்த இவர் 1976 ஆம் ஆண்டு புதிய தமிழ்ப் புலிகள் என்ற இயக்கத்தின் பெயரை தமிழீழ விடுதலைப்புலிகள் என மாற்றம் செய்து மரபுவழி ஆயுதப் போராட் டத்தை ஆரம்பித்தார்.

இவரது மனைவி மதிவதனியாவார். இவரது பிள்ளைகள் மூவர் – சாள்ஸ் அன்ரனி, துவாரகா, பாலச்சந்திரன் ஆவார்கள்.

சர்வதேச நாடுகள் பலவற்றில் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்ட இவர்,2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது– மே மாதம் 18 ஆம் திகதி கொல்லப்பட்டார் என இலங்கை அரசாங்கம் அறிவித்தது.

# நுழைபுலம் ஆய்வு விருதுக்கான படைப்புக்கள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

கொழும்பு கம்பன் கழகத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான கம்பன் விழாவை முன்னிட்டு வழங்கப்படும் நுழைபுலம் ஆய்வு விருதுக்கான நூலைத் தெரிவு செய்வதற்கென ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்களிடமிருந்து தரமான படைப்புக்கள் எதிர்பார்க்கப்படுவதாக கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் ஆய்வு நூல்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் பிரசுரமானவையாகவும் மொழி,கலை, இலக்கியம் உள்ளடக்கிய மானுடவியல், சமூக விஞ்ஞானத்துறை சார் ஆய்வுகளை கொண்டதாகவும் அமைதல் வேண்டும். மேலும் வயதெல்லை இன்றி அனைவரும் இதில் பங்கெடுக்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தேர்வுக்கு ஆய்வுகளை அனுப்பிவைக்க விரும்புவோர் அனுப்பப்படும் ஆய்வு தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதி செய்து ஆய்வின் 3 பிரதிகளை சுயமாக தயாரிக்கப்பட்ட ஆய்வுப் பணி விபரக் கோவையுடன் இணைத்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக நுழைபுலம் ஆய்வு விருதுத் தேர்வு, கொழும்பு கம்பன் கழகம், 12இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு-06எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி விருதுக்காக தெரிவு செய்யப்படும் ஆய்வுக்கு 20 ஆயிரம் பொற்கிழியும் வழங்கப்படவுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# சுற்றுலா விசாவில் மலேசியா சென்ற இலங்கையர்கள் கைதாகினர்

(கொழும்பு)

**மலேசியாவில் விசா விதிமுறைகளை மீறிய நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சுற்றுலா விசாவில் மலேசியாவுக்கு சென்று அந்த விசா விதி முறைகளை மீறி தொழில் முயற்சிகளில் ஈடுபட்ட நூற்றுக் கணக்கான இலங்கையர்கள் மலேசியாவில் கைது செய்யப் பட்டுள்ளனர்.**

சுமார் ஆயிரம் பேர் அளவில் இவ்வாறு விசா விதிமுறை மீறியமை தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலா விசாவில் மலேசியாவுக்கு பயணிப்போர் அங்கு வேலை தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து மலேசியாவில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு தினந்தோறும் முறைப்பாடுகள் கிடைப்பதாக அவர் சுட்டிக்கட்டினார்.

விசா நிபந்தனைகளை மீறிச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் மலேசியாவில் கைதாகியுள்ள இலங்கையர்களுக்கு இலங்கையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஒருவிதத்திலும் பொறுப்புக்கூறாது என்று அப்பணியகம் நேற்று அறிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் விசாவில் மலேசியாவுக்குச் சென்றுள்ள இலங்கையர்கள் பலர் அங்கு வேலை வாய்ப்புக்களைத் தேடி அலைந்து வந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களின் விடுதலையை தம்மால் உறுதி செய்யமுடியாது என்றும் அதற்காக ஒருபோதும் பணியகம் உதவப்போவதுமில்லை என்றும் பணியகத்தின் பிரதி முகாமையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பாய் தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் அமைந்திருந்த பாய் தொழிற் சாலையை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் புத்தூர் வாதரவத்தை கிராமத்திற்கு நேற்று முன்தினம் மாலை விஜயம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் நவலோகராஜா ஆகியோர் அப்பகுதிகளைப் பார்வையிட்டதுடன், வாதரவத்தை பகுதியில் பாய் தொழிற்சாலை அமைந்திருந்த பகுதிக்கு விஜயம் செய்து தொழிற்சாலையையும் பார்வையிட்டுள்ளனர்.

சுமார் முப்பது முதல் நாற்பது பெண்கள் வரையில் பணியாற்றி வந்த இந்தபாய் தொழிற்சாலை இன்று முழுமையாக அழிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

இந்த தொழிற்சாலையை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாகவும் கிராம மக்களின் தேவைகள் குறித்தும் இவர்கள் பிரதேச மக்களுடன் விரிவாக கலந்துரையாடியுள்ளனர். பின்னர் வாதரவத்தை விக்னேஸ்வரா சனசமூக நிலையத்திற்கும் விஜயம் செய்து சனசமூக நிலையத்திற்கான வீதிப் பிரச் சினைகள், முன் பள்ளிக்கான கட்டடத் தேவைகள் என் பன தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடியுள்ளனர்.

விக்னேஸ்வரா சனசமூக நிலையச் செயலாளர் ரவி தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலின் போது பிரதேச இளைஞர், யுவதிகள் என பொருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)





சத்தியசாயி பாபாவின் 88ஆவது அவதார தின விழா கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் சாயிசேவா நிலையத்தில் நடைபெற்றபோது...

# பொதுநலவாய புறக்கணிப்பு இந்தியாவுக்கே அதிக பாதிப்பு

## ஆஸி. ஊடகம் தகவல்

(கொழும்பு)

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கொழும்பில் நடைபெற்ற பொது நலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்காமை, இலங்கையின் மனித உரிமை நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தாது என அவுஸ்திரேலிய ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் கென்பரா டைம்ஸ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை மாநாட்டை புறக்கணித்தமை காரணமாக இந்தியா பல இழப்புக்களை சந்திக்குமே தவிர, நன்மைகளின் அளவு மிகவும் குறைவானதே என ஊடகத்தின் பத்தி எழுத்தாளரான அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகமான க்ரோவ்போட்டின் விரிவுரையாளர் ரமேஸ் தாகூர் தெரிவித் துள்ளார்.

மாநாட்டை புறக்கணித்தமைக்கான விலையை இந்தியா செலுத்த நேரிடும். இலங்கை மனித உரிமை நிலைமைகளின் அடிப்படையில் மன்மோகன்சிங் இந்த முடிவை எடுக்கவில்லை.

தமிழகம் வாழ் மக்களின் வாக்குகளை மையமாகக்கொண்டே இந்த முடிவை மன்மோகன் எடுத்திருந்தார்.எனவே, மாநாட்டை புறக்கணி த்தமை இந்தியாவுக்கு அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தும் என தாகூர் சுட்டிக்காட்டியுள்ளார்.(அ-2)

## போதைப் பொருட்களுடன் மாணவன் கைது

போதைப்பொருள் விற்பனை செய்த மாணவன் ஒருவனை நிக்கவரெட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நிக்கவரெட்டிய பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் 18 வயதுடைய மாணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலொன்றையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த மாணவனை போதைப்பொருள் பக்கற்றுக்களுடன் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிக்கவரெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# ஜெயபாலனின் கைது; பாரிய மனித உரிமை மீறலாகும்

## சுதந்திர ஊடக இயக்கம்

(கொழும்பு)

இலங்கையின் இலக்கியவாதியாகவும் நடிகராகவும் உள்ள உலகப் புகழ்பெற்ற கவிஞன் சண்முகப் பிள்ளை ஜெயபாலன் கைது செய்யபபட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக குறித்த ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலஞ்சென்ற தனது தாயின் கல்லறையில் அஞ்சலி செலுத்துவதற்காக நீண்டகாலத்திற்கு பின்னர் ஜெயபாலன் தனது தாய் நாட்டுக்கு வருகைதந்திருந்தார்.

தாயின் கல்லறையில் அஞ்சலி செலுத்தும் நோக்கில் வடக்கிற்கு சென்ற ஜெயபாலனை பொலிஸார் அநீதியாக கைது செய்து தடுத்து வைத்துள்ளமையானது பாரதூரமான மனித உரிமை மீறலாகும்.

அத்துடன் அவரது கைதானது பேச்சுரிமை மற்றும் எழுத்துரிமையை கடுமையாக மீறும் செயல் என சுதந்திர ஊடக அமைப்பு வலியுறுத்திக் கூறிக்கொள்கிறது.

பொலிஸார் உட்பட அரசாங்கத்தின் அதிகாரிகள் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையானது அருவருக்கத்தக்கதும் வன்மையாக கண்டிக்கத்தக்கதுமான செயலாகும்.

ஜெயபாலன் மீது விசா விதிமுறைகளை மீறினார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் கூறியிருந்தார். இதனை பயன்படுத்தி கடந்த சில வாரங்களாக தாம் விரும்பாத நபர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இரண்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து நாடுகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் இந்த குற்றச்சாட்டுக்களே சுமத்தப்பட்டன.

இவ்விதமாக நாட்டின் சட்டத்தை அரசாங்கம் மாற்றுக் கருத்துக்களை கொண்டுள்ளவர்களுக்கு எதிராக பயன்படுத்துவது நாகரிகமானதல்ல. இதன் மூலம் இலங்கையின் நற்பெயரே வெளிநாடுகளில் பாதிப்புக்கு உள்ளாகும். இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

இதனால் ஜெயபாலனை உடனடியாக விடுதலை செய்து, நாட்டில் உள்ள சகல மக்களின் பேச்சுரிமை, கருத்துக் கூறும் உரிமைகளை பாதுகாத்து, சுற்றுலாப் பயணி ஒருவர் தாம் விரும்பிய இடத்திற்கு செல்வது உட்பட அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்குமாறும் நாட்டின் சட்டத்தை தவறாக பயன்படுத்த வேண்டாம் என்றும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம் என சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# 2015 இல் சர்வதேச விசாரணை

# இலங்கையை தூக்குமேடை நோக்கி இழுத்துச் செல்லும் பிரித்தானியா...!



**ஐ.நா** மனித உரிமைகள் பேரவை, மீண்டும் இலங்கைக்கு தொல்லை கொடுக்கும் கெட்டகனவாக மாறத்தொடங்கியுள்ளது. கடந்த மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, இலங்கை அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்ட கால அவகாசம், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முடிவடையவுள்ளது.

ஜெனீவா தீர்மானத்துக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் நடந்துகொண்டுள்ளதா- தனது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளதா என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்பொறுப்பு, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவர், ஏற்கனவே கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்துவிட்டு, சமர்ப்பித்த வாய்மூல அறிக்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கவுள்ள, அமர்வில் இலங்கை அரசாங்கம் கடுமையான அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடும் என்பது முன்னரே தெரிந்த விடயம்தான்.

அரசாங்கமோ, அதற்கு இன்னமும் சில மாதங்கள் இருக்கிறது தானே என்ற அலட்சியத்தில் இருந்தது.

ஆனால், அந்த அலட்சியத்துக்கு ஆப்பு வைத்துவிட்டுப் போயிருக்கிறார் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன்.

அடுத்த நான்கு மாதங்களுக்குள் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்களை சுதந்திரமாகவும், நம்பகமாகவும் விசாரிக்கத் தவறினால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மூலம், சர்வதேச விசாரணைக்கு அழுத்தங்களைக்கொடுப்போம் என்று அவர் எச்சரித்துள்ளார்.

பிரித்தானியாவின் இந்த எச்சரிக்கை சாதாரணமானதோ, வெறும் தேர்தல் பிரசாரங்களுக்கானதோ அல்ல. இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராக, இதுவரை அமெரிக்கா எந்தளவுக்கு கடுமையான போக்கை கடைப்பிடித்ததோ, அதற்கு நிகராக அல்லது அதற்கு அதிகமாக கடும் நிலைப்பாட்டை பிரித்தானியா எடுப்பதற்கான அறிகுறியே இதுவாகும். பிரித்தானியப் பிரதமரின் எச்சரிக்கையை அடுத்தே, மீண்டும் ஜெனீவா குறித்து பேச்சுக்கள் தீவிரமடைந்துள்ளன.

டேவிட் கெமரூனின் எச்சரிக்கையையோ, காலக் கெடுவையோ ஏற்க முடியாது என்று ஜனாதிபதியும் அமைச்சர்களும் நிராகரித்துள்ளனர். ஆனால், அவற்றையெல்லாம் ஐ.நா செவிமடுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை. ஏற்கனவே இரண்டு தீர்மானங்கள் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், இந்த இரண்டு தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்த இலங்கை தவறியுள்ள நிலையில் சர்வதேச சமூகத்துக்கு சர்வதேச விசாரணை என்ற ஒரே தெரிவு மட்டுமே எஞ்சியுள்ளது. ஜெனீவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த தவறினால், இந்த வழிமுறையை நோக்கி நகர்வது தவிர்க்க முடியாதது என்று அமெரிக்க இராஜதந்திரத் திணைக்கள அதிகாரிகள் ஏற்கனவே பலமுறை எச்சரித்துவிட்டனர். இப்போது பிரித்தானியாவும் அதையே வலியுறுத்த ஆரம்பித்துள்ள நிலையில் சர்வதேச விசாரணை என்ற விடயம் அழுத்தம் பெறத் தொடங்கியுள்ளது.

சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடக்குமா, அதற்கான சாத்தியம் இருக்குமா, உலக வல்லரசு நாடுகள் இதைத் தடுத்துவிடுமா என்று சந்தேகம் கொண்டிருந்தவர்களுக்கு தற்போது சர்வதேச விசாரணையை நோக்கி இலங்கை தள்ளப்பட்டு வருவதற்கான உணர்வு ஏற்படுவதாகத் தெரிகிறது. எனினும் இலங்கை அரசாங்கத்தினதும் அமைச்சர்களினதும் வீர வசனங்கள் மட்டும் குறையவேயில்லை.

சர்வதேச விசாரணை என்ற தூக்கு மேடையை நோக்கி இலங்கையை இழுத்துச் செல்வதற்கான களமாகவே, அடுத்த மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் அமையவுள்ளது என்று தயான் ஜெயதிலக வெளியிட்டுள்ள கருத்து மிக முக்கியமானது.

ஏற்கனவே, தயான் ஜெயதிலக ஜெனீவா தீர்மானங்கள் குறித்து வெளியிட்ட கருத்துக்களும், அதை யதார்த்தமாக அணுக முற்பட்டதன் விளைவும்தான், அவர்மீதான அரசாங்கத்தின் கடுப்புக்கு காரணமாக அமைந்தது. டேவிட் கமரூனின் எச்சரிக்கையை அலட்சியப்படுத்தக் கூடாது என்றும் அது அடுத்த ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான நகர்வுக்கு அடிப்படையாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமர்வில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம், அதையடுத்து 2013 மார்ச் மாதம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் தொடர்ச்சியாக அடுத்த ஆண்டிலும் அமெரிக்காவே தீர்மானத்தைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், 2013 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை தவறினால், தொடர்ந்து தீர்மானங்களை கொண்டு வந்துகொண்டிருக்க முடியாது. ஐ.நாவின் ஏனைய சபைகளினது ஒத்துழைப்புக்களுடன் மாற்று வழி ஒன்று பற்றி யோசிக்க வேண்டியிருக்கும் என்று அமெரிக்க அதிகாரிகள் ஏற்கனவே கூறியுள்ளனர்.

இத்தகைய நிலையில் மீண்டும் ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவர அமெரிக்கா பெரும்பாலும் விரும்பாது. முன்னைய தீர்மானங்களின் போதும் பிரித்தானியா, ஐ.நா மனித உரிமை பேரவையில் வாக்களிக்கும் உரிமையைக் கொண்ட நாடாகவோ நேரடியாக தீர்மானத்தைக்கொண்டு வரக்கூடிய நாடாகவோ இருக்கவில்லை. ஆனால், அடுத்த மார்ச் மாதம் நடக்கவுள்ள அமர்வில், ஐ.நா. மனித உரிமை பேரவைக்குள் பிரித்தானியா நுழையப் போகிறது.

வரும் ஜனவரி 1 ஆம் திகதி முதல் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான அங்கத்துவம் பெறுகிறது பிரித்தானியா.

இந்த நிலையில், இலங்கைக்கு எதிரான அடுத்த நகர்வில், பிரித்தானியா, முக்கிய பங்கு வகிக்கலாம். அது அமெரிக்காவே இலங்கை மீது வன்மம் பாராட்டுகிறது என்ற கருத்துக்களை உடைக்கவும் பயன்படும். அதேவேளை, ஐ.நா. பொதுச்சபையில் கடந்த 12 ஆம் திகதி நடந்த வாக்கெடுப்பில் ஜனவரி 1 ஆம் திகதி முதல், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவம் பெறப்போகும். 14 நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் இலங்கைக்கு எப்போதும் வக்காலத்து வாங்கும் ரஷ்யா, சீனா, கியூபா ஆகிய நாடுகள் இருப்பது முக்கியமான விடயம்.

அல்ஜீரியா, சீனா, கியூபா, பிரான்ஸ், மாலைதீவு, மெக்சிக்கோ, மொராக்கோ, நமீபியா, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, மசிடோனியா, பிரித்தானியா, வியட்நாம் ஆகிய நாடுகளே புதிதாக பேரவைக்குள் நுழையவுள்ளன. அங்கோலா, ஈக்வடோர், குவாட்டமாலா, லிபியா, மலேசியா, மாலைதீவு, மொரிட்டானியா, போலந்து, கட்டார், மோல்டோவா, ஸ்பெய்ன், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, உகண்டா ஆகிய நாடுகளுக்குப் பதிலாகவே இந்தப் புதிய 14 நாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 2013 ஜெனீவா தீர்மானத்தை ஆதரித்த நாடுகள் ஆறு. எதிர்த்த நாடுகள் ஆறு. நடுநிலை வகித்த நாடுகள் இரண்டும் அடங்குகின்றன. புதிதாக உள்வரும் நாடுகளில் அடுத்த முறை இலங்கைக்கு கைகொடுக்கக்கூடிய நாடுகள் என்றால் சீனா. ரஷ்யா கியூபா, சவுதி அரேபியா, வியட்நாம், அல்ஜீரியா போன்றவற்றைக் குறிப்பிடலாம்

கடந்தமுறை தீர்மானத்தை எதிர்த்த மாலை தீவின் நிலை இம்முறை மாற்றம் பெறலாம். அதேவேளை கடந்த முறை தீர்மானத்தை 25 நாடுகள் ஆதரித்த நிலையில் அடுத்த ஆண்டு தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அந்தளவு நாடுகள் ஆதரிக்குமா என்ற கேள்வியும் இருக்கிறது. எனினும், அமெரிக்காவோ, பிரித்தானியாவோ கொணடு வரக்கூடிய அடுத்த தீர்மானத்தை தோற்கடிக்கும் அளவுக்கு இலங்கையால் செயற்பட முடியாது என்றே, தயான் ஜெயதிலக குறிப்பிட்டார். அடுத்த கூட்டத் தொடரில் இறுதியான காலக்கெடு ஒன்று கொடுக்கப்படும், அல்லது தடைகள் விதிக்கப்படும் என்றும் அதற்கும் மசியாது போனால், 2015 இல் இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தப்படும் அபாயம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எது எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை ஏற்க முடியாது என்றே கூறி வருகிறது. ஆனால், ஐ.நா அமைப்பு ஒன்றில் தீர்மானத்தை முன்னெடுக்கும்போது, இலங்கையின் விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் கருத்தில் எடுக்கப்படாது போய்விடும். உள்நாட்டு விசாரணைகளில் நம்பிக்கையில்லை என்றும் இதுவரை கூறி வந்தவர் நவநீதம்பிள்ளை. இப்போது அதே நிலைப்பாட்டிக்கு டேவிட கெமரூனும் வந்துள்ளது நவநீதம்பிள்ளையின் கருத்தை மேலும் பலமடையச் செய்துள்ளது. இதுவரை அமெரிக்கா இந்தளவுக்கு முன்னேற்றமான கருத்தை வெளியிடவில்லை. ஆனால், சமீபகாலமாக அமெரிக்கா மௌனமாக இருந்துவந்தாலும் போர்க்குற்றங்கள் குறித்து உறுதியான ஆதாரங்களை சேகரிக்கும் முயற்சியில் அது ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கின்றன.

ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவரும், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான புதிய உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வாலும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளும் அடுத்த மார்ச் அமர்வில் இலங்கைக்கு கடிவாளம் போடும் முயற்சிகளில் இறங்கியுள்ளதாகத் தெரிகிறது. எனவே, ஜெனீவா பற்றிய கெட்ட கனவுகள் இனி இலங்கையின் தூக்கத்தையும் நிம்மதியையும் கெடுக்கப்போவது உறுதி.

-சுபத்ரா-

# கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை 2013 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள்/ மேல் மாகாணம்

## விஞ்ஞானம் பகுதி -II

❖ பகுதி (A) இல் தரப்பட்டுள்ள நான்கு வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள இடைவெளிகளில் விடைகளை எழுதவும்
❖ பகுதி (B) இல் தரப்பட்டுள்ள உயிரியல். இரசாயனவியல். ஆகிய ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஒரு வினாவைத் தெரிவு செய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.
❖ பகுதி (A) கட்டமைப்பு வினா
எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்

(நேற்றைய தொடர்ச்சி)

4.இந்நிலைமை சமூகத்தில் இருந்து முற்றாக அகற்ற முடியாமைக்கான காரணம் யாது? (புள்ளிகள் 02)

5.இந்நிலைமை அடுத்த பரம்பரைக்கு கடத்தப்படுவதை தடுப்பதற்கு முன்மொழியக்கூடிய நடவடிக்கை ஒன்றைக் குறிப்பிடுக? (புள்ளி 01)

6.பரம்பரை இயல்புகளில் ஏற்படும் இவ்வாறான மாற்றத்தை எவ்வாறு அழைப்பர்? (புள்ளி 01)

B பாணை நன்றாக பொங்கச் செய்வதற்கு பேக்கரியில் பின்வரும் உபாயங்களைப் மேற்கொள்வர்.

a.பாண் கலவைக்கு சீனி சிறிதளவைச் சேர்த்தல்
b.பாணுடன் ஈஸ்ட்டைக் கலத்தல்
c.கலவையை சில மணித்தியாலங்கள் விடுதல்

1.மாக்கலவைக்கு இட்ட கரும்புச் சீனியில் உள்ள காபோவைதரேற்று யாது? (புள்ளி 01)

2.காபோவைதரேற்றில் உள்ள பல் பகுதியங்களுக்கு அமைய சீனி எவ்வகையான பல் பகுதியம் எனக் கூறுக. (புள்ளி 01)

3.ஈஸ்ட்டில் உள்ள நுண்ணங்கிக் கூட்டம் எது? (புள்ளி 01)

4.மாக்கலவையில் சிறிய குமிழிகள் சிறைப்பட்டிருந்தன அக்குமிழிகளில் உள்ள வாயு எது? (புள்ளி 01)

5.மாக்கலவையில் இடப்பட்ட ஈஸ்ட்டில் உள்ள நுண்ணங்கி மேற்கொள்ளும் சுவாச முறையைக் குறிப்பிடுக? (புள்ளி 01)

6.இச்செயன்முறையின் போது நடைபெறும் தாக்கத்திற்கான சொற்சமன்பாடடைத் எழுதுக? (புள்ளிகள் 02)

7.மாக்கலவையை திண்மம் நிலையில் நீண்ட நேரம் விடும்போது புளிக்கின்றன இதற்கான காரணம் யாது? (புள்ளி 01)

C. மூலக்கூற்று உயிர் தொழில்நுட்பம் மூலம் உயர் இயல்புடைய விலங்குகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

1. மூலக்கூற்று உயிர் தொழில்நுட்பம் என்றால் என்ன? (புள்ளிகள் 02)

2.பூச்சிகளுக்கு எதிர்ப்புத்தன்மை கொண்ட சோளத் தாவரத்தைப் பெற்றுக் கொள்ள சோளத்தின் நிறமூர்த்தத்துடன் எந்த நுண்ணங்கியின் பரம்பரையலகு இணைக்கப்பட வேண்டும்? (புள்ளி 01)

3.மனிதப் பரம்பரையலகு வேறு அங்கிகளின் பரம்பரையலகுடன் இணைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும் பதார்த்தங்கள் இரண்டைக் குறிப்பிடுக? (புள்ளி 01)

### இரசாயனவியல்

7.ஆய்வுகூடத்தில் செப்புசல்பேற்று பளிங்குகள் ($CuSo4.5H_2O$) நீல நிறமாக காணப்படுகின்றன.

A. மாணவர்கள் சிறிதளவு செப்புசல்பேற்றை எடுத்து புடக்குகையில் இட்டு வெப்பப்படுத்தினர்.

i. இங்கு புடக்குகை பயன்படுத்தப்பட்டதற்கான காரணம் யாது? (புள்ளி 01)

ii.புடக்குகை முக்காலியில் நிறுத்துவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது? (புள்ளி 01)

iii.இவ்வாறு வெப்பமேற்றும் போது
a. ஏற்படும் நிறமாற்றம் b.பௌதீக தன்மையில் ஏற்படும் மாற்றம் (புள்ளிகள் 02)

B. 100 ml நீரை முகவையொன்றில் எடுத்து $CuSO_4$ இட்டு இருப்புக் கலக்கியினால் கலக்கி நீல நிறக் கரைசலை தயாரித்துக் கொண்டனர். எனினும் சிறிதளவு செப்பு சல்பேற்று எஞ்சிக் காணப்பட்டது. இங்கு நிரம்பிய கரைசல் தோன்றியதாலே அது கரையவில்லை என மாணவனொருவன் கூறினான்.

i. நிரம்பிய கரைசல் என்றால் என்ன? (புள்ளி 01)

ii.இவ்வாறு கூறுவதற்கான காரணம் யாது? (புள்ளி 01)

iii.கரைசலை 80°C. வரை வெப்பமேற்றிய போது அடியில் எஞ்சி இருந்த பளிங்குகள் முற்றாக கரைந்தன. இதற்கான காரணத்தை விளக்குக? (புள்ளி 01)

C.தயாரிக்கப்பட்ட கரைசலை கொதி குழாயினுள் இட்டு அதனுடன் 10 ml எதனோல் கலக்கப்பட்டது.

இதன்போது செப்பு சல்பேற்று பளிங்குகள் தோன்றி குழாயின் அடியில் படிந்தன. மேலும் கரைசலின் நிறம் குறைந்தது.

i.செப்பு சல்பேற்றின் கரைதிறன் மீது எதனோல் எவ்வாறு செல்வாக்கு செலுத்தியதெனக் கூறுக. (புள்ளி 01)

ii.இத்தோற்றப்பாட்டிற்கான காரணத்தை விளக்குக. (புள்ளி 01)


iii.கரைசலை கலக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட இரும்புக் கலக்கியை கரைசலினுள் சிறிது நேரம் வைத்த போது கிடைக்கும் பின்வரும் அவதானங்களை விளக்குக.

a. இரும்புக் கலக்கியின் மீது கபில நிறப்பொருள் படிந்து காணப்படல் (புள்ளி 01)

b. $CuSO_4$ கரைசலின் நீல நிறம் குறைவடைதல் (புள்ளி 01)

iv.இங்கு நடைபெற்ற தாக்கத்திற்கான சமப்படுத்தப்பட்ட சமன்பாட்டை எழுதுக? (புள்ளிகள் 02)

(D)




i. குழாயின் ஒருபக்க முனையில் உள்ள கடதாசியை முன்னோக்கித் தள்ளும் போது இரண்டு கடதாசிக் கோளங்களுக்கும் இடைப்பட்ட வளியின்
a. கனவளவு (b) அமுக்கம் மாறுபடும் முறையை விளக்குக? (புள்ளிகள் 02)

ii.இத்தோற்றப்பாட்டை விளக்குவதற்கு பயன்படுத்தக் கூடிய விதியை எழுதுக. (புள்ளிகள் 02)

iv.இங்கு அடைக்கப்பட்ட வளியின் அமுக்கம் வளிமண்டல அமுக்கத்திற்குச் சமனாகக் காணப்பட்டது (1000 Pa) அதன் அமுக்கத்தை இரண்டு மடங்காக்கும்போது கனவளவில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 02)

v. இக்காலப் பகுதியில் மாறிலியாகக் காணப்படும் காரணி ஒன்றைக் குறிப்பிடுக. (புள்ளி 01)

08. A. உலகில் அதிகளவு உற்பத்தி செய்யப்படும் உலோகம் இரும்பாகும். உலோகத்தை தாழ்த்துவதன் மூலம் அது பிரித்தெடுக்கப்படுகின்றது. ஒரு தொன் இரும்பு உற்பத்தி செய்யப்படும் போது 1.9 தொன் காபனீரொட்சைட்டு சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றது.

i. இரும்பு பிரித்தெடுப்பில் கற்கரி. சுண்ணாம்பு ஆகியவை பயன்படுத்தப்படுவதற்கான காரணம் யாது? (புள்ளிகள் 02)

ii. இரும்புத்தாதில் உள்ள இரண்டு கனியங்களைக் குறிப்பிடுக. (புள்ளி 1)


iii.இரும்பு பிரித்தெடுப்பில் நடைபெறும் தாழ்த்தல் தாக்கத்திற்குரிய சமப்படுத்தப்பட்ட சமன்பாட்டை எழுதுக. (புள்ளி 1)

iv.காபனீரொட்சைட்டு வளிமண்டலத்திற்கு விடுவிக்காமல் அதனை சேகரித்து அவற்றில் இருந்து பெறக் கூடிய நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக. (புள்ளிகள் 2)

v. ஊதுளையில் காணப்படும் உலோகக் குழம்பின் அடர்த்தி திரவ இரும்பு அடர்த்தியை விட குறைவதனால் கிடைக்கும் நன்மையொன்றைக் குறிப்பிடுக. (புள்ளி 1)

vi. இரும்பு பிரித்தெடுப்பின் போது முதல் விளைபொருளாக கிடைக்கும் சீனச்சட்டி (cast iron) மிகவும் வலிமையான உலோகமாகக் காணப்படுவதற்கான காரணம் யாது? (புள்ளி 1)

B. கொதிநீரில் பொற்றாசியம். பெரிசயனைட்டு. சோடியம். குளோரைட்டு சேர்த்து தயாரிக்கப்பட்ட திரவமய ஊடகத்தைப் பயன்படுத்தி பின்வரும் அமைப்புக்கள் தயாரிக்கப்பட்டன.





i. மேலுள்ள அமைப்பில் ஆணியைச் சூழ நிறமாற்றம் ஏற்படாத அமைப்பு எது? (புள்ளி 1)

ii. ஏனைய அமைப்புக்களில் ஆணியைச் சூழ ஏற்பட்ட நிறமாற்றம் யாது? (புள்ளிகள் 2)

iii.இவ்வாறு நிறமாற்றம் ஏற்பட்டமைக்கான காரணம் யாது? (புள்ளிகள் 2)

iv. கதோட்டுப் பாதுகாப்பு என்றால் என்ன? (புள்ளிகள் 2)

v. கதோட்டுப் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்ட அமைப்பு எது? (புள்ளி 1)




C.மூன்று பரிசோதனைக் குழாயினுள்ளும் ஒரே செறிவு கொண்ட ஐதரோகுளோரிக் அமிலத்தின் சமக்கனவளவு எடுக்கப்பட்டு ஒரே நேரத்தில் மக்னீசியம். நாகம். இரும்பு ஆகிய உலோகங்கள் இடப்பட்டன.

i. இவ்வமைப்பின் மூலம் தாக்க வீதத்தைத் துணிவதற்கு பெற்றுக் கொள்ளக் கூடிய அவதானமொன்றைக் குறிப்பிடுக. (புள்ளி 1)

ii.பரிசோதனைக் குழாய்கள் மூன்று நீர்த் தாழியினுள் வைக்கப்பட்டதற்கான காரணம் யாது? (புள்ளி 1)

iii.இம் மூன்று மூலகத்தினதும் தாக்க வீதத்திற்கு அமைய இறங்கு வரிசைப்படுத்தி எழுதுக? (புள்ளி 1)

(தொடரும்)

# கடல் எல்லையை தாண்டக் கூடாதென மீனவர்களுக்கு அறிவுறுத்துங்கள்

## தமிழகத்திடம் அமைச்சர் ராஜித கோரிக்கை

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடிக்கக் கூடாதுதென எமது மீனவர்களுக்கு நாம் அறிவுறுத்தல் வழங்கி யுள்ளது போன்று இந்திய மற்றும் தமிழ் நாட்டு அரசியல் தலை வர்கள் தமது மீனவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்காதிருப்பது ஏன் என கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

எமது கடற்படை இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிப்பதே இல்லை. இதனை இந்திய கரையோர காவல் படையே அந்நாட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்திருக்கின்றது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் நாட்டிலுள்ள சில ஊடகங்கள் அற்ப அரசியல் இலாபம் பெறும் நோக்கில் பொய்ப்பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன. உண்மைக்குப் புறம்பானவற்றை செய்திகளாக்கி வெளியிடுகின்றன.

இலங்கைக் கடற்படை இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்தே மீனவர்களை கைது செய்கின்றது என்ற குற்றச்சாட்டை அந்நாட்டின் கரையோர காவல் படையே நிராகரித்துள்ளது. அதனை அவர்கள் அந்நாட்டு நீதிமன்றத்துக்கும் அறிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிப்பதால்தான் பிரச்சினை. தினமும் 400 முதல் 500 வரையான படகுகளில் அவர்கள் வருகின்றார்கள். ஆனால், இந்தியக் கடல் எல்லைக்குள் சென்று மீன்பிடிக்க வேண்டாம் என்று எமது மீனவர்களுக்கு நாம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம்.

எமது அறிவுறுத்தலை மீறி மீன் பிடித்தால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடி எம்மிடம் வரவேண்டாம் என்றும் நாம் அவர்களுக்கு கூறியுள்ளோம்.

இவ்வாறு இந்திய மற்றும் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் தம் மீனவர்களுக்கு ஏன் அறிவுறுத்தல் வழங்கவில்லை. இதேநேரம் சட்ட விரோத மீன்பிடித்தலைக் கட்டுப்படுத்துவதற்காக நாம் எடுத்துள்ள



நடவடிக்கைகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் கூட எம்மை பாராட்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேநேரம் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுல சூரிய, எமது படையினர் எந்த சந்தர்ப்பத்திலும் எந்த நாட்டினதும் எல்லைகளுக்குள் பிரவேசிப்பதே இல்லை என்று கூறினார். (அ-2)

# பொலிஸ் அதிகாரியை கடித்துக் குதறிய நபர்

(கொழும்பு)

நீதிமன்ற பிடியாணையின் பேரில் தேடப்பட்டுவந்த சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்யச் சென்றவேளை அச்சந்தேக நபர் பொலிஸ் அதிகாரியை பாய்ந்து கடித்து தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

முகத்தில் படுகாயமடைந்த பொலிஸ் அதிகாரி நிக்கவரெட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நிக்கவரெட்டிய பிரதேசத்தின் கேடியான மேற்படி நபர் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக தேடப்பட்டு வந்தார். இந்நபர் பற்றிய தகவல் பொலிஸாருக்குக் கிடைத்ததையடுத்து சந்தேகநபரை கைது செய்யச்சென்ற வேளையிலேயே பொலிஸாரிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக பொலிஸ் அதிகாரியின் முகத்தை கடித்துக் குதறிவிட்டு அவர் தப்பிக்க முயன்றுள்ளார்.

எனினும் சமயோசிதமாக செயற்பட்ட ஏனைய பொலிஸ் அதிகாரிகள் சந்தேகநபரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

குறித்த நபர் முன்னர் ஒரு தடவை நீதிமன்ற கூண்டில் வைத்து கிருமி நாசினி அருந்தி தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# மீனவர் பிரச்சினையை தீர்க்க ஒத்துழைப்பு வழங்குங்கள்

## மத்திய அமைச்சர் வாசன்

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கான தீர்வினை காண்பதற்கு தமிழக அரசும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதி களும் கூட்டாக இணைந்து இந்திய மத்திய அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் என மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார்.

அம்பூரில் நேற்று முன்தினம் ஊடகவிய லாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் ஜி.கே.வாசன் இதனை வலியுறுத்தியதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்வதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம் கேட்டுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் படகுகளை விடுவிக்கவும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தாம் தெரிவித்ததாக ஜி.கே.வாசன் கூறியுள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர், தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச் சர்கள், மக்களவை உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீனவர் விவகார த்தில் ஏகோபித்த கருத்தை வெளி யிட்டு வருவதா கவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

### தனி விமானத்தில் வந்தார் இந்தியக்கடற்படைத் தளபதி

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் தேவேந்திர குமார் ஜோஷி கொழும்புக்கு வருகை தந்துள்ளார்.

இலங்கை கடற்படை நடத்தும் காலி கலந்துரையாடலில் பங்கேற்பதற்காகவே அவர், நேற்றுமுன் தினம் இந்திய விமானப்படையின் தனி விமானத்தில், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியக் கடற்படைத் தளபதியை, கட்டுநாயக்க விமான நிலையத்தில், இலங்கை கடற்படையின் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் ஜெயந்த பெரேரா வரவேற்றார். (அ-2)

# வர்ண இரவு நிகழ்வு

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு 4 ஆவது வர்ண இரவு- நிகழ்வு யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-266)

# மூன்று எழுத்து வாகனங்களால் 250 மில்லியன் ரூபா வருமானம்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அண்மையில் அறிமுகப்படுத்திய ஆங்கில எழுத்துக்கள் மூன்று அடங்கிய விசேட வாகனங்களால் இதுவரையில் 250 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது என்று அத் திணைக்களம் தெரிவித்தது.

"முந்தைய வாகனப்பதிவுகளின் போது இரண்டு ஆங்கில எழுத்துக்களே உள்ளடக்கப்பட்டிருந்தன. இருப்பினும், புதிய நடைமுறைக்கமைய இந்த மூன்றெழுத்து அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த புதிய நடைமுறைக்கமைய முதல் 3ஆயிரம் இலக்கங்களும் வாடகை வாகனங்களுக்காக பதிவு செய்யப்பட்டு விட்டன" என்று திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எஸ்.எச்.ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.

"ஒரு நாளைக்கு 15 முதல் 20 வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு வாகனத்துக்கென 70 ஆயிரம் ரூபா பதிவுக் கட்டணமாக அறவிடப்படுகின்றது" என அவர் குறிப்பிட்டார்.

மாதமொன்றுக்கு 30 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்யப்படுவதாகவும் அவற்றில் 5 ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் அடங்குவதாகவும் அவர் மேலும் கூறினார்.(2)

# கொச்சிக்கு தங்கம் கடத்தியோர் கைது

(சென்னை)

இலங்கையில் இருந்து கொச்சிக்கு விமானம் மூலம் தங்கம் கடத்திச் சென்ற 56 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இருந்து கொச்சிக்கு விமானத்தில் வரும் பயணிகள் தங்கம் கடத்தி வருவதாக சுங்கத் துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

அதன் அடிப்படையில் கொச்சி விமான நிலையத்தில், அந்த விமானத்தில் வந்த 28 பெண்கள் மற்றும் 14 ஆண் பயணிகளிடம் நடத்திய சோதனையில் அவர்கள் மறைத்து கொண்டு வந்த மொத்தம் 10 கிலோ தங்க நகைகளை பறிமுதல் செய்தனர்.

கொழும்பில் உள்ள ஒரு கும்பல், அவர்களை தங்கம் மற்றும் பொருட்களை கடத்தி செல்வதற்கு பயன்படுத்துவதும் விசாரணையில் தெரிய வந்தது.

இதேவேளை, 1.733 கிலோ கிராம் தங்கத்துடன் 14 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# போர்க்குற்றச் சாட்டுக்கள் குறித்து பொருட்படுத்தாதீர்

## சர்வதேசத்திடம் சீனா கோரிக்கை

(கொழும்பு)

மனித உரிமைகளை முன்னேற்றுவதிலும் நாட்டை கட்டியெழுப்புவதிலும் முன்னேற்றத்தை காட்டுகின்ற இலங்கைக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நாட்டுக்குள் குழப்ப நிலைமையை ஏற்படுத்துவதற்கு காரணமாகின்ற நடவடிக்கைகளை பொருட்படுத்த வேண்டாம் என சீனா சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சீன வெளிநாட்டமைச்சு விடுத்ததாக கூறப்படும் உரை மற்றும் பொதுநலவாய மாநாட்டின் போது இலங்கை மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் திகதி நிர்ணயித்து பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் கூறிய கூற்று தொடர்பில் கருத்து வெளியிடும் போதே சீனா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாக கொழும்பு சீன தூதுவர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு உரிய சூழ்நிலையைக் கட்டியெழுப்புவதற்கு கைகொடுப்பதே சிறந்ததென அது சுட்டிக் காட்டியுள்ளது. சீனா, மனித உரிமைகளை முன்னேற்றுவதிலும் நாட்டை கட்டியெழுப்புவதிலும் அதே போன்று சகல துறைகளிலும் முன்னேற்றத்தை காட்டுகின்ற இலங்கைக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்குவதாக சீனா மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகளைப் பேணவும் நாட்டை கட்டியெழுப்பவும் இலங்கை கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

இது குறித்து தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கும் ஆற்றலும் வலிமையும் இலங்கை அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் உள்ளன என நாம் நம்பிக்கை கொள்கிறோம்.

இலங்கையில் நடைபெற்றதாக கூறப்படும் யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன் விசாரணை செய்வதற்கு நம்பிக்கையான பொறி முறையொன்றை (இயந்திரமொன்றை) ஏற்படுத்த வேண்டும் என டேவிட் கமரூன் தெரிவித்தார்.

அவ்வாறு செய்யாவிடின் சர்வதேச விசாரணையொன்றை நடத்துமாறு சர்வதேசத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக அவர் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் இலங்கை தொடர்பில் சீனாவின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை என இலங்கையில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

சீன வெளிநாட்டமைச்சின் கூற்றை அநேகமான ஊடகங்கள் திரிபுபடுத்தி உள்ளதாகவும் இலங்கையிலுள்ள சீன தூதரகம் அறிவித்துள்ளது.

(அ-2)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்த கோரி நேற்று கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் கொலைச் சம்பவங்களையும் கட்டுப்படுத்துமாறு கோரியும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் நேற்று யாழ். நீதிமன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெண்கள் அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் சுமார் 50 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கு கொண்டிருந்தனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறையற்ற சமுதாயத்தை எமது எதிர்காலத்தில் உருவாக்குவோம் உள்ளிட்ட பதாகைகளை கையில் ஏந்தியவாறு இந்தப் போராட்டத்தில் பல பெண்கள் பங்கு கொண்டிருந்தனர்.

கடந்த மாதமளவில் யாழ். நாச்சிமார் கோவில் தேர் முட்டியிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் அரியாலை நெடுங்குளத்தைச் சேர்ந்த லோகராணியென பின்பு தெரிய வந்தது. அத்தோடு இந்தப் பெண்ணின் மரணத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின் னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்றைய தினம் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே யாழ்.நீதிமன்றத்திற்கு முன்பாக பெண்கள் அமைப்பினரால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-6)

# அமைச்சுக்களின் நிதியை ஆராய குழு அமைப்பு

(கொழும்பு)

வரவு செலவுத் திட்ட விவாதத்துக்கு உட்படுத்தப்படாத 35 அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட தெரிவுக் குழுவொன்றை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நியமித்துள்ளார்.


இதில் சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் 21 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

வரவு - செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்று முன்தினம் சபாநாயகர் தலைமையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

சபை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் சபாநாயகர் தெரிவுக்குழு உறுப்பினர்களின் பெயர்களை அறிவித்தார். (அ-2)

# மக்களின் வீடுகளை சோதனையிடின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாது

## ஜனாதிபதி ஹமீத் கர்சாய் புதிய நிபந்தனை



(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டுக்குப் பின்பும் அமெரிக்கப் படைகளை நீடிக்க அந்நாட்டு ஜனாதிபதி ஹமீத் கர்சாய் புதிய நிபந்தனைகளை விதித்துள்ளார்.**

இதுகுறித்து ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றுகையில்,

அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் முன்பாக, தலிபான் அமைப்புகளுடன் ஆப்கஏன் அரசு மேற்கொள்ளும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்காவும் ஒத்துழைப்பு தர வேண்டும்.

மேலும், ஆப்கானிஸ்தான் மக்களின் வீடுகளில் அமெரிக்கப்படைகள் அத்துமீறி நுழைந்து சோதனையிடுவதை நிறுத்த வேண்டும். அதனையும் மீறி அமெரிக்கப் படைகள் சோதனையிடின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாது என்று கர்சாய் எச்சரிக்கை விடுத்தார்.


ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டுக்கு பின்னரும் நீடிப்பதற்கு இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ள முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த ஒப்பந்தம் குறித்து விவாதிக்க ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தில் நான்கு நாட்கள் கூட்டம் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் முடிவடைந்த இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான உறுப்பினர்கள் அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு ஜனாதிபதி கர்சாயை வலியுறுத்தினர்.முன்னதாக, நாடாளுமன்ற கூட்டத்தின் முதல் நாளான கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி கர்சாய் உரையாற்றுகையில்,

"ஆப்கானிஸ்தானில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாது" என்று தெரிவித்திருந்தார்.எனினும், இந்த ஆண்டு இறுதிக் குள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு அமெரிக்க அரசு வலியுறுத்தி வருகிறது.

கடந்த 2010ஆம் ஆண்டு முதல் 75 ஆயிரம் வீரர்கள் கொண்ட நேட்டோ படையினர் ஆப்கானில் தங்கியுள்ளனர் என்றார். (2)

# பில் கிளிண்டனுக்கு விடுதலை விருது



அமெரிக்க குடியரசுத் தலைவர் வழங்கும் விடுதலை விருது முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனுக்கு வழங்கப்பட்டது.

வெவ்வேறு துறைகளில் சாதனை புரிந்த அமெரிக்கர்களுக்கு ஆண்டுதோறும் விடுதலை விருது(Medal Of Freedom) வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனுக்கு அரசியலில் அரும் பெரும் சாதனை புரிந்தமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நவம்பர் 22ஆம் திகதி பகல் ஒரு மணியளவில், டல்லாஸ் நகரில் சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜான் எப் கென்னடியால் இந்த விருது அறிவிக்கப்பட்டது.

ஆயினும் அவர் தனது கைகளால் அந்த விருதை ஒருவருக்கு கூட வழங்க முடியாது போயிற்று.

காரணம் முதல் விருது வழங்கும் விழாவுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவேதான் அவர சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர்இறந்தஐம்பதாவது நினைவு நாள் அண்மையில் அமெரிக்கா முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

கென்னடி அறிவித்த விருது விழா, அவரது மறைவு தினத்தையொட்டி, அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களால் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆண்டும் இந்த விருது வழங்கும் தருணம் தனக்கு மகிழ்ச்சியான ஒன்று என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா குறிப்பிட்டுள்ளார். (2)

# தூதரகங்களுக்கு சீனா கடும் கண்டனம்

(பீஜிங்)

கிழக்கு சீன கடல் எல்லையில் சீனா வான்வெளி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதை அமெரிக்கா மற்றும ஜப்பான் நாடுகள் விமர்சித்துள்ளன.

இதனையடுத்து சீனாவில் உள்ள அமெரிக்க மற்றும் ஜப்பான் தூதரங்களுக்கு சீன பாதுகாப்பு அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சீன பாதுகாப்பு துறை அமைச்சர் நேற்று தெரிவித்துள்ளதாவது,

கிழக்கு சீன கடல் பகுதியில் மக்கள் வசிக்கவில்லை என கூறுவது ஆதாரமற்றது. அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகள் இது போன்ற பொறுப்பற்ற பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும்.

பண்டைக்காலம் தொட்டு, தியாயூ தீவும் அதைச் சார்ந்த தீவுகளும் சீனாவின் உரிமைப் பிரதேசங்களாகும். தியாயூ தீவின் இறையாண்மையைப் பேணிக் காக்கும் மனவுறுதியில் சீனா ஊன்றி நிற்கும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (2)

# ஆளில்லா விமானத் தாக்குதல்களை அமெரிக்கா நிறுத்த வேண்டும்

## இம்ரான்கான் தெரிவிப்பு

அமெரிக்கா ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்தும் ஏவுகணைத் தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருக்கும் நேட்டோ படையினருக்கு தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்களைத் தடுப்போம் என தெக்ரிக்- இ- இன்சாப் கட்சித் தலைவர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் தெக்ரிக் இ இன்சாப் கட்சியினர் பெஷாவர் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் வீதி மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

அப்போது பெஷாவரில் தனது கட்சி தொண்டர்கள் மத்தியில் இம்ரான்கான் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பாகிஸ்தானில் வட மேற்கில் உள்ள கைபர்பக்துன் கவா மாகாணத்தின் மலைப் பகுதிகளில் தீவிரவாதிகள் முகாம் அமைத்து பதுங்கியுள்ளனர். அவர்கள் மீது ஆளில்லா விமானங்கள் மூலம் அமெரிக்க உளவுத்துறை ஏவுகணை வீசி அழித்து வருகிறது.




இத்தாக்குதலில் தீவிரவாதிகளுடன் பொதுமக்களும் பெருமளவில் உயிரிழக்கின்றனர். எனவே, அப்பகுதியில் அமெரிக்கா தாக்குதலை நிறுத்த வேண்டும் என இம்ரான்கானின் தெக்ரிக் இ இன்சாப் கட்சியினர் வலியுறுத்தி வருகின்றனர். அதை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளாது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

எனவே ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்தும் ஏவுகணை தாக்குதல்களை அமெரிக்கா தடுத்து நிறுத்த வேண்டும். இல்லாவிடின் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருக்கும் நேட்டோ படையினருக்கு தேவையான பொருட்களை எடுத்து செல்லும் அதன் வாகனங்களைத் தடுப்போம் என்றார்.

அதனைத் தொடர்ந்து ஆவேசம் அடைந்த கட்சி தொண்டர்கள் ஆயிரக் கணக்கானோர் பெஷாவர் வழியாக ஆப்கானிஸ்தான் செல்லும் 'நேட்டோ' வாகனங்களை தடுத்தனர். வீதிகளில் அமர்ந்து மறியல் செய்தனர்.

அதே போன்று கைபர் பக்துன் கவா மாகாணம் வழியாக ஆப்கானிஸ்தான் செல்லும் வீதிகளில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் இம்ரான கான் கட்சியுடன் அதன் கூட்டணி கட்சிகளும் கலந்து கொண்டன. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்க தேசிய கொடியை எரித்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (2)

# எழுத்தாளனின் ஒவ்வொரு படைப்புக்களும் எதிர்கால வரலாற்றில் பதியப்படல் வேண்டும்

## வடக்கு மாகாண அமைச்சர் டெனிஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளனின் ஒவ்வொரு படைப்புக்களும் எதிர்கால வரலாற்றில் பதியப்படல் வேண்டும் என வடக்கு மாகாண மின்பிடி , போக்குவரத்து வர்த்தகத்துறை வாணிபம் மற்றும் கிராமிய அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டிலும், மன்னார் நகர சபை நலன்புரி சங்கத்தின் அனுசரணையோடும் ஜே.ஆர்.மயூரனின் மனப் பூக்கள் என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வாழ்த்துக் கவிகவிஞர்மடவளை கலீல். நூல் வெளியீட்டுரை சாகித்திய விருது நாயகன் எஸ்.ஏ. உதயன், நூல் மதிப்பீட்டுரை பல்துறை வித்தகன் அ.நிசாந்தனும் வழங்கினர்.

நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுகையில்,

இதுபோன்ற நூல் வெளியீடுகள் வரவேற்கதக்கது என்றும் ஆனால் மக்களின் ஆதரவு குறைவாக இருப்பதை கண்டு மிகவும் வேதனையடைகின்றேன்.

ஒவ்வொரு எழுத்தாளர்களதும் படைப்புக்கள் எதிர்கால வரலாறுகளில் நிச்சயமாக பதியப்பட வேண்டிய ஒரு விடயம் என்பதால் அவர்களது முயற்சிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.



எழுத்தாளர்கள் போலவே ஒவ்வொரு ஊடகவியலாளர்களும் எத்தனையோ பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து மக்களுக்கு ஒரு சிறந்த சேவையை செய்கின்றார்கள.எதிர்காலத்தில் இவ் விரு துறைகளிலும் விசேட கவனம் செலுத்த எண்ணியுள்ளதாகவும் எழுத்தாளர்கள் என்பவர்கள் சில சிந்தனைகளை சொல்ல முனையும் போது வார்த்தைப் பிரயோகங்களை கவனித்துக்கொண்டால் மென்மேலும் சிறப்பாக இருக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அருட்திரு.தமிழ்நேசன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து,வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபி விருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் சிறப்பு விருந்தினர்களாக வன்னி பாராளு மன்ற உறுப்பினர் வினோ நோதராதலிங்கம், மன்னார் நகர முதல்வர் ச.ஞானப்பிரகாசம், மன்னார் நகர பிரதி முதல்வர் ஜேம்ஸ் ஜேசுதாசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.எ.ஜே.துரம், மன்னார் நகர சபை செயலாளர் எக்ஸ். எல்.ரெனால்ட், சித்த மருத்துவ நிபுணர் வைத்தியர் எஸ்.லோகநாதன் மற்றும் இயக்குநர் டயஸ் போரலங்கா (அவுஸ்திரேலியா) ஜெரமி லியனகே ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (ம-4)




# வவுனியா குழுமாட்டுச் சந்தி காளிகோயில் உடைக்கப்பட்டு திருட்டு

(குருமன்காடு)

வவுனியா, குழுமாட்டுச் சந்தியிலுள்ள காளி கோவிலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தங்கநகைகள் உள்ளிட்டவை கொள்ளையிடப்பட்டுள்ளன.

இக்கோவிலின் பின்புற கதவு உடைக்கப்பட்டு மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த மூல விக்கிரகம் அகற்றப்பட்டு அதன் கீழ் இருந்த தங்கம், நாணயங்கள், ஐம்பொன் மற்றும் தங்கநகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதுடன், கோவிலில் வைக்கப்பட்டிருந்த உண்டியலும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அத்துடன், இக்கோவிலின் மடப்பள்ளி உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருட்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மேலும், கோவில் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த வாள்கள் வெளியில் வீசப்பட்டுள்ளன.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸில் மேற்படி கோவில் நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இதற்கு முன்னரும் நீர்ப்பம்பிகள் மற்றும் உண்டியல்கள் களவு போயிருந்ததாகவும் கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ம-250)

# வட மாகாண சுகாதார அமைச்சரின் மன்னாருக்கான விசேட விஜயம்

## சுகாதார பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு



(மன்னார்)

வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தலைமையில் மன்னார் மாவட்ட சுகாதார சேவைகளின் நிலைமைகள் தொடர்பில் ஆராயவென விசேட சந்திப்பொன்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன் போது மன்னார் மாவட்டத்தின் சுகாதார சேவைகளின் தற்போதைய நிலை மற்றும் பின்தங்கிய பாதிக்கப்பட்ட கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றிற்கான நடமாடும் சுகாதார வைத்திய சேவைகள் வழங்குவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், எச்.ஐ.வி. நோயாளருக்கான விசேட திட்டங்கள் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

குறித்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி பிறிமூஸ் சிராய்வா, வைத்திய கலாநிதி குணசீலன், வடமாகாண சுகாதார பணிப்பாளர் திருமதி எஸ்.ஆர்.யூட்,வட மாகாண சுதேச வைத்திய பணிப்பாளர் திருமதி துரைரட்ணம், பிராந்திய சுகாதார பணிப்பாளர் என்.பறீட் மற்றும் ஏனைய பிராந்திய வைத்தியர்கள் மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ம)

# வன்னி பிரதேச பாடசாலைகளில் அதிபர், பிரதி அதிபர்கள் இல்லை

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அதிபர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தோர் பலர் உள்ள போதும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்வி வலயங்களின் கீழுள்ள பல பாடசாலைகளில் ஆசிரியர் தரத்தில் உள்ளவர்களே பாடசாலை அதிபர்களாகவும் பிரதி அதிபர்களாகவும் கடமையாற்றிவருகின்றனர்.

இதன் காரணமாக ஆசிரியர்களும் மாணவர்களும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாக மாணர்களது பெற்றோரும் கல்வியியலாளர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவுருவதாவது,

வன்னியில் உள்ள பல பாடசா்லைகள் அதிபர்கள் இல்லாது இயங்குவதுடன், அதிபர்களாகவும் பிரதி அதிபர்களாகவும் அதே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் தரத்தில் உள்ளவர்களே கடமை புரிந்து வருகின்றனர். இதன் காரணமாக உள்ளக முரண்பாடுகள் ஏனைய ஆசிரியர்களுக்கிடையில் ஏற்படுகின்றன.

இதனால் ஆசிரியர்கள் பலர் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மாணவர் கல்வியிலும் வீழ்ச்சி நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள கல்வி வலயத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியர்களே அதிபர்களாகவும் பிரதி அதிபர்களாகவும் கடமையாற்றுகின்றனர்.

இங்குள்ள 1 AB பாடசாலை ஒன்றில் அதிபர் தரம் Iஇற்கு மேலுள்ளவர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் அதிபர் தரம் 2- II இல் உள்ள ஒருவரும், பிரதி அதிபராக ஆசிரியர் தரத்தில் உள்ள ஒருவரும் கடமையாற்றுவதால் க.பொ.த. உயர்தர மாணவர்களைக் கட்டுப்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்துள்ளதுடன் அதிபர், ஆசிரியர்களை பற்றி மாணவர்கள் பாடசாலையின் பெயரில் தொடக்கப்பட்டுள்ள முகப்புத்தகத்தில் தரக்குறைவாகவும் பல பொய்யான தகவலையும் வெளியிடுகின்றனர்.

இவ்வாறு பல பாடசாலைகளில் பல முரண்பாடுகளும் இடர்பாடுகளும் காணப்படுவதால் வன்னி பாடசாலை மாணவர்களிடம் கல்வியில் சித்தி வீதம் அதிகரிக்கப்பட வேண்டும் என அறிக்கை விடுவோர் பாடசாலைகளுக்கு வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தோர் பலர் உள்ள போதிலும் ஏன் நியமனங்களை வழங்கவில்லை என பெற்றோர் களும் கல்வியியலாளர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-15)

# வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுங்கள்

(கண்டாவளை)

சுண்டிக்குளம் சந்தியில் இருந்து சுண்டிக்குளம் கடற்கரை செல்லும் பிரதான வீதி புனரமைப்பு செய்யப்படாது, குண்டும் குழியுமாக காணப்படுவதால் இவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதியால் 2 கிலோமீற்றர் தூரம் வரையான பகுதி புனரமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்டளவு தூரவீதியே புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இவ்வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணி



களும் பயணிக்கின்றனர்.

எனவே மழைகாலத்திற்கு முன்னர் இவ் வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவவேண்டுமென பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)

# மூன்று கடற்றொழில் பரிசோதகர்கள் நியமனம்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சினால் புதிதாக மூன்று கடற்றொழில் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டு இம்மாதம் முதல் பதவியேற்றுள்ளார்கள்.

மூவரில் ஒருவர் பூநகரி பகுதி கடற்றொழில் விரிவாக்க அலுவலகத்தில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய இருவரும் மாவட்டத்தின் வேறு பகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் மாவட்டத்தில் கடற்றொழில் பரிசோதகர்களுக்குபற்றக்குறை நிலவி வந்ததும் இவர்களின் நியமனத்தின் மூலம் இக்குறைபாடுநீக்கப்பட்டுகடற்றொழில் சம்பந்தமான அபிவிருத்திக்கும் ஆலோசனைக்கும் வழி பிறந்துள்ளதாக கடற்றொழில் கூட்டுறவு சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-84)

# மதுப்பிரியர்களின் அட்டகாசம்; பயணிப்போர் திண்டாட்டம்

(கண்டாவளை)

பரந்தன் சந்தியில் இருந்து முல்லைத்தீவு நோக்கி மாலை வேளைகளில் பயணிக்கும் தனியார் பேருந்துகளில் பலர் மதுபோதையில் பயணிப்பதாக பயணிகள் விசனம் தெரி விக்கின்றனர்.

குறிப்பாக இரவு 7,8 மணி ஆகிய நேரங் களில் பயணிக்கும் பேருந்துகளிலே இவ்வா றான நிலைமை பெரிதும் காணப்படுகின்றது.

இரவு 7 மணிக்கு புறப்படும் பேருந்தை தவறவிடுபவர்கள் மேலும் ஒரு மணி நேரம் தரிப்பிடத்தில் காத்திருந்து இரவு 8 மணிக்கு புறப்படும் முல்லைத்தீவிற்கான இறுதி பேருந்திலே பயணம் செய்ய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய வெளி மாவட்டங்களில் இருந்தும் ஏனைய இடங்களில் இருந்தும் வரும் பயணிகளாலும் 8 மணி வரை காத்திருந்து பயணிக்கும் பயணிகளாலும் பேருந்து நிரம்பி வழிகின்ற நிலையில் மதுப் பிரியர்களின் தொல்லை தாங்க முடியாதுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-263)

அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்ல பயனை அளிக்கும் விதத்தில் முடிகிறது.
– செனெக்கா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அன்று மகாத்மா காந்தியை அடித்தவர்கள் இன்று அவருக்கு சிலை வைக்கிறார்கள்

இந்திய தேசத்தின் விடுதலைக்காகப் போராடியவர் மகாத்மா காந்தி. காந்தியின்அகிம்சை போராட்டத்தின் வலிமைகாரணமாக இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தது.

இந்திய தேசத்தின் விடுதலைக்காய் பேராட்டம் நடத்திய காந்திக்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இழைத்த கொடுமைகள் ஏராளம். காந்தியின் போராட்டத்தை முறியடிப்பதற்காக வெள்ளையர்கள் செய்த அட்டகாசங்களும் அக்கிரமங்களும் சொல்லிமாளா. இருந்தும் காந்தி தனது அகிம்சைப் போராட்டத்தை மனஉறுதியோடு தொடர்ந்தார். அதன் விளைவு பாரததேசத்திற்கு விடுதலை கிடைத்தது.

இந்திய தேசத்திற்கு பிரிட்டன் வழங்கிய சுதந்திரம் என்பது விருப்போடு வழங்கப்பட்டதல்ல. தமது குடியாட்சியில் இருந்த இந்தியாவை இழக்கின்றோமே! என்ற மனக் கவலையுடனேயே இந்தியாவிற்கான சுதந்திர உடன்படிக்கையில் பிரிட்டன் ஒப்பமிட்டுக்கொண்டது.

இந்திய தேசத்தின் சுதந்திரத்திற்காக காந்தி நடத்திய போராட்டத்தால் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கு காந்தி மீது கடும் கோபம் இருந்ததை எவரும் மறுக்க மாட்டார்கள்.

கதர் வேட்டியுடன் சால்வையை மேலங்கியாக்கிய கோலத்துடன் காந்தி லண்டன் மாநகருக்கு சென்றபோது ஆங்கிலேயர்கள் காந்தியை கிண்டல் செய்தனர்.

எனினும் ஆத்ம பலம் உடைய மகாத்மா காந்தி அதுபற்றி அலட்டிக்கொள்ளவோ, உணர்ச்சிவசப்பட்டு கோபம்கொள்ளவோ இல்லை.

தனது இலட்சியம் பாரத தேசத்தின் விடுதலை. எனவே அது பற்றிய சிந்தனையன்றி வேறெதுபற்றியும் கவனம் கொள்ளேன் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார். இதன் காரணமாக காந்தி தனது இலட்சியத்தில் வெற்றிகண்டார்.

ஒரு காலத்தில் காந்தியை கடுமையாக எதிர்த்தவர்கள், தாக்கியவர்கள் இன்று தங்கள் நாட்டில், காந்தியின் உருவச்சிலையை நிறுவி வணக்கம் செலுத்தி வருகின்றனர்.

ஆம், ஒரு காலத்தில் தனது எதிரியாக காந்தியைப் பார்த்த பிரித்தானியா இப்போது காந்தியின் அகிம்சையே உலகில் ஒற்றுமையை ஏற்படுத்தும் உன்னதமான ஆயுதம் என்று கருதுகிறது.

அதன் காரணமாகவே காந்தியின் உருவச்சிலையை தனது நாட்டில் நிறுவ வேண்டும் என பிரிட்டன் தீர்மானித்துக் கொண்டது.

ஆக, ஒருகாலத்தில் பிழை என்று நினைத்தது பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதுவே சரி என்றாகிவிடுகின்ற சம்பவங்கள் உலக வரலாற்றில் நிறையவே நடந்துள்ளன.

இலங்கை மண்ணில் எல்லாள மன்னனுடன் போர் செய்த துட்டகைமுனு, எல்லாள மன்னன் இறந்த இடத்தில் அனைவரும் எல்லாள மன்னனுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் எனக் கட்டளையிட்டான்.

அந்தக் கட்டளைக்குள் எல்லாள மன்னன் ஒரு வீரன் என்ற உண்மையும் அவன் சிறந்த மன்னன் என்ற நிலையும் அவனைப் போரில் வென்ற முறை துட்ட கைமுனுவுக்கு மன உறுத்தலை கொடுத்தது என்ற மெய்ம்மையிலும் அத்தகையதொரு கட்டளையை துட்டகைமுனு விடுத்திருக்க முடியும்.

எதுவாயினும் போரில் விழுப்புண் அடைந்து உயிர் நீத்தவர்கள் தொடர்பில் அவர்களுக்கு மரியாதை செலுத்துவது மனித மாண்பு என்பதையே எல்லாள மன்னனை மக்கள் அஞ்சலிக்க வேண்டும் என்ற துட்டகைமுனுவின் கட்டளை சுட்டி நிற்கிறது எனலாம்.

ஆக; துட்டகைமுனுவின் அன்றைய பரம்பரை அதனை ஏற்றுக் கொண்டதெனும் போது, இன்றைய நிலைமை வேதனை தருவதாகும்.

# சபரிமலை யாத்திரிகர்களுக்கு இலவச விசா வழங்க ஏற்பாடு

சபரிமலை யாத்திரிகர்களுக்கு இந்திய தூதரகம் மூலமாக இலவச விசாவும் இந்து மத திணைக்களம் மூலமாக அடையாள அட்டையும் வழங்கப்படவுள்ளதாக கொழும்பு மாநகரசபை உறுப்பினர் லக்ஷ்மன் குரு நாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது,

இம்முறை சபரிமலைக்கு யாத்திரைக்கு செல்லும் பக்தர்களின் தொகை வெகுவாக அதிகரித்துள்ளது. அதேபோல் இந்தியாவுக்கு சுற்றுலா விசா தொகையும் பெரிதும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் சபரிமலை செல்லும் பக்தர்களுக்கு இலவச விசா வழங்கி வருகின்றார்கள்.

இம்முறையும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் இந்திய துணை தூதுவருடன் கலந்துரையாடி இலவச விசா வழங்குவதை உறுதிப்படு த்தியுள்ளார். அதேபோல் இந்து கலாசார திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு சபரிமலை செல்லும் பக்தர்களுக்கு திணைக்களத்தினூடாக அடையாள அட்டை வழங்கப்படுவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தனி நபர்களுக்கு இந்திய விசா வழங்குவதில் சிக்கல்கள் இருப்பத னால் குழுவாக யாத்திரை பயணம் செய்பவர்களுக்கே இவ் விசா வசதி செய்து கொடுக்கப்படும்.

இன்று நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சபரிமலைக்கு பல ஆயிரம் பக்தர்கள் பயணிக்க உள்ளனர். கடந்த யுத்த கால கட் டத்திலே இவர்கள் கறுப்பு உடை அணிவதனால் பல பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்திருந்தனர்.

இப்பொழுது நாட்டில் இவ்வாறான பிரச் சினைகள் இல்லாவிட்டாலும் கூட இந்தி யாவுக்கு செல்லும் பொழுது அங்கே இவர்க ளது பாதுகாப்பை பேணுவதற்காகவே இவ் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின் றன.

இதனை கருத்திற் கொண்டு அனைத்து பக்தர்களும் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வது அவசியமானதாகும்.

இந்திய விசா அல்லது அடையாள அட்டைகள் சம்பந்தமான நேரடி உதவிகள் தேவைப்படுமாயின் பக்தர்கள் தமது அலு வலகத்தின் உதவியை நாடுமாறு அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## பெண் கைதிகளின் புனர்வாழ்வுக்காக 5 பேர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கையின் சிறைச்சாலை வரலாற்றில் முதல் முறையாக பெண் கைதிகளின் புனர்வாழ்வுக்காக பிரபல நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாலினி பொன்சேகா தலைமையில் 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் ஏனைய அங்கத்தவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே, சட்டத்தரணி சத்துரிக்கா விஜேசிங்க, மருத்துவர் நேத்ராஞ்சலி மானம்பிட்டிய, சட்டத்தரணி நேலீ அந்திராஹென்னதி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்தது. இலங்கையின சிறைச்சாலைகளில் சுமார் ஆயிரத்து 200 பெண் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் உளவியல் பிரச்சினை, கருத்துக்கள், யோசனைகளை கவனத்தில் கொண்டு எப்படியான புனர்வாழ்வு பயிற்சிகளை இவர்களுக்கு வழ்ழங்கலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# இந்திய மீனவர்கள் 15 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். எழுவைதீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 15 பேரும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி எம்.எஸ். மகேந்திரராஜாவினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய புதுக்கோட்டை ஜனதா பட்டினத்திலிருந்து 4 படகுகளில் வந்த 15 மீனவர்கள் கடந்த ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கை கடற் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் காரைநகர் கடற்படையின்ரால் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் தொடர்ந்து 3 தடவைகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் மேற்படி வழக்கு மீண்டும் நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய மீனவர்களை விடுதலை செய்வதாக நீதிபதி தெரிவித்ததுடன் மீனவர்களின் 4 படகுகள் தொடர்பான வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அத்துடன் அத்தினத்தில் மேற்படி 4 படகுகளின் உரிமையாளர்களும் நீதிமன்றத்திற்கு வருகை தரவேண்டுமெனவும் உத்தரவிட்டார். (அ-4-6)

## யோகா பயிற்சி

(யாழ்ப்பாணம்)

முழுமை நல வாழ்வுக்கு மனவளக் கலைப் பயிற்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வண்ணை நாச்சிமார் கோயில் திருமண மண்டபத்தில் தமிழ் நாட்டு முதுநிலைப் பேராசிரியர் ஆர். ஜெயபாலால் நடத்தப்படவுள்ளதாக வண்ணை தவமையப் பொறுப்பாளர் த. நந்தகுமரன் அறிவித்துள்ளார். (அ)

## கண்காணிப்புக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த இம்மாதத்திற்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நாளை முற்பகல் 9.30 மணிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் இக்கூட்டம் பிராந்திய சேவைகள் பணிமனையில் நடைபெறும் எனவும் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

## முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு நிகழ்வு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரு கிராமசேவகர் பிரிவுகளில் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரி க்கை நிகழ்வும் ஒத்திகை பயிற்சிச் செயற் பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் படி இன்று அரியாலை கிழக்கு ஜே/89 கிராம சேவகர் பிரிவில் காலை 10 மணிக்கும் அரியாலை தென்கிழக்கு ஜே /90கிராம சேவகர் பிரிவில் பிற்பகல் 3 மணிக்கும் இடம் பெறவுள்ளன.

எனவே இது தொடர்பில் பொது மக்களை அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் குழப்பமடைய தேவையில்லை எனவும் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

## கட்டுப்பாட்டை மீறியோர் மீது உடன் நடவடிக்கை

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டை மீறியவர்கள் மீது ஒன் றியக் கண்காணிப்பாளர்கள் உடன் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேற்படி சங்கத்தினரால் வாராந்த விடுமுறை நாள் ஞாயிற்றுக்கிழமையென அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் விடுமுறை தினமாகிய நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொழில் நிலையத்தினை திறந்தவர்களுக்கு எதிராகவும் கடந்த வாரம் நேரக் கட்டுப்பாட்டை மீறியோர் மீதும் ஒன்றியக் கண்காணிப்பாளர்களினால் உடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டப்பணமும் அறவிடப்பட்டதாக ஒன்றியத்தின் செயலர் அறிவித்துள்ளார். (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## வேண்டுதல் ஒரு பலவீனம்



❖ சமயம் என்கிற கறவை மாடு பல தடவை உதைத்திருக்கலாம். ஆனால், அதை நாம் பொருட்படுத்த வேண்டாம். ஏனென்றால் அது நமக்கு நிறைய பால் தருகிறது. பால் கொடுக்கும் பசுவின் உதையைப் பால்காரன் பொருட்படுத்த மாட்டான்.

❖ நாம் அனைவரும் ஒளி தரும் விளக்குகள். விளக்கு எரிந்து ஒளி காட்டுவதுதான் நம் வாழ்க்கை என கொள்ளப்படுகிறது.

❖ கடவுளிடம் ஒன்றையும் வேண்டாதீர்கள். வேண்டுதல் ஒரு பலவீனம். இதனால், நாம் பிச்சைக்காரர்களாகி வருகிறோம். நாம் அனைவரும் ராஜகுமாரர்கள் என்பதை உணர்ந்து கொள்வோம்.

❖ பலவந்தமாகச் செய்யப்படும் சீர்திருத்த முயற்சிகள் எப்போதும் பயன் தருவதில்லை. நீங்கள் அனைவருமே நல்லவர்தான். இன்னும் நல்லவராக முயலுங்கள்.

❖ அன்பு ஒருபோதும் பிறரைக் குறை கூறுவதில்லை. பேராசை தான் பிறரைக் குறை சொல்லி மகிழ்கிறது. அதில் நேர்மையோ நியாயமோ இருப்பதில்லை. எனவே ஆசையை ஒதுக்குங்கள்.

# வேண்டப்பட்ட நாடு என்ற அந்தஸ்து இந்தியாவுக்கு வழங்க வேண்டும்

## பாக். வர்த்தக பிரதிநிதி தெரிவிப்பு

**(சிங்கப்பூர்)**

**"மிகவும் வேண்டப்பட்ட நாடு என்ற அந்தஸ்தை இந்தியாவுக்கு அளிக்க வேண்டும்" என பாகிஸ்தான் அரசுக்கு எங்கள் சங்கம் பரிந்துரைத்துள்ளது. இதை பாகிஸ்தான் அரசு ஏற்றுக்கொள்ளவில்லையெனில் அடுத்த ஆறு மாதங்களில் பாகிஸ்தானின் இறக்குமதியில் சரிவு ஏற்படும் என பாகிஸ்தான் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதி அப்துல் ரசாக் தாவூத் எச்சரித்துள்ளார்.**

இந்தியா- பாகிஸ்தான் வர்த்தக பிரதிநிதிகளின் கருத்தரங்கு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் லாகூரில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் சிங்கப்பூரில் தெற்கு ஆசிய புலம்பெயர்ந்தவர்கள் மாநாடு கடந்த 21, 22 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட பாகிஸ்தான் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதி அப்துல் ரசாக் தாவூத், செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இந்தியா - பாகிஸ்தான் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கருத்தரங்கில் வர்த்தகக் கட்டுப்பாடு மற்றும் சரக்குப் பரிமாற்றம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளன.



இந்தக் கருத்தரங்கின் முக்கிய நோக்கம் இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவை மேம்படுத்துவதேயாகும். தற்பொழுது இருநாடுகளுக்கும் இடையே 200 கோடி ரூபாவிற்கு நடைபெற்று வரும் வர்த்தகம் அடுத்த 10 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 600 கோடி ரூபாவாக உயர வாய்ப்புள்ளது.

இருநாடுகளும் இணைந்து பணியாற்றினால் அதிக வளர்ச்சியைப் பெறமுடியும். பாகிஸ்தான் தொழிலதிபர்கள் இந்தியா மற்றும் தெற்கு ஆசிய நாடுகளுடன் வலுவான வர்த்தக உறவை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றனர்.

"மிகவும் வேண்டப்பட்ட நாடு" என்ற அந்தஸ்தை இந்தியாவுக்கு அளிக்க வேண்டும் என பாகிஸ்தான் அரசுக்கு எங்கள் சங்கம் பரிந்துரைத்துள்ளது. இதனை பாகிஸ்தான் அரசு ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் அடுத்த ஆறு மாதங்களில் பாகிஸ்தானின் இறக்குமதியில் சரிவு ஏற்படும் என அப்துல் ரசாக் தாவூத் தெரிவித்தார். (அ-2)

# காஷ்மீர் எல்லையில் கண்காணிப்பு தீவிரம்



(ஸ்ரீநகர்)

அடுத்தாண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக தீவிரவாதிகள் மிகப்பெரிய தாக்குதலை நடத்தத் சதி திட்டம் தீட்டியுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளதையடுத்து, காஷ்மீர் எல்லையில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து இராணுவ அதிகாரி கூறியிருப்பதாவது,

காஷ்மீரில் தற்போது பனிப்பொழிவு இருந்து வருகிறது. இதனைப் பயன்படுத்தி எல்லைக் கோட்டு பகுதி வழியாக தீவிரவாதிகள் ஊடுருவ முயன்று வருகின்றனர். இதனைத் தடுக்க இராணுவத்தினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகினறனர்.

பொதுவாக பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் எல்லையில் ஊடுருவல் அதிக அளவில் இருக்கும்.

ஆனால் தற்சமயம் 10 இலிருந்து 20 அடி வரை பனியால் அந்த இடம் மூடிக்கிடக்கிறது. எனவே ஊடுருவல் குறைந்துள்ளது.


மேலும் அடுத்த ஆண்டு நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. சில மாநிலங்களில் சட்டசபை தேர்தலும் நடைபெறுகிறது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த சதித்திட்டத்தை முறியடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என இராணுவ அதிகாரி தெரிவித்தார். (அ-2)

## பாரதச் செய்தி

# விசா விதிமுறைகள் இல்லாத பயணங்கள் நடைபெற வேண்டும்

## நவாஸ் ஷெரீப் தெரிவிப்பு



(லாகூர்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும இடையே விசா விதிமுறைகளைகள் இல்லாத பயணங்கள் நடைபெற வேண்டும் என தான் விரும்புவதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் பிரதமர் நவாஸ் ஷெரீப் இலக்கியம் மற்றும் கலாசார மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த இந்தியப் பத்திரிகையாளர்களைப் பார்த்தே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து இந்தியப் பத்திரிகையாளர்கள் அரசிடம் எடுத்துக் கூறி ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில்,

இந்தியாவில் வரவிருக்கும் தேர்தல் குறித்து பாகிஸ்தான் எதிர்ப்புப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்த நவாஸ் ஷெரீப் பாகிஸ்தானில் தேர்தல் நடந்தபோது இந்தியா குறித்த எதிர்ப்பு பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

இரு நாடுகளும் ஒரு கண்ணாடி வெளியிடும் பிம்பங்களைப் பிரதிபலிப்பவை போன்றவை ஆகும். எனவே இரு நாடுகளுக்குள்ளும் நல்லுறவு தேவை. இது அவசியமும் ஆகும் என்று அவர் குறிப்பிட்டார்.

பத்திரிகையாளர்களிடம் ஷெரப நேரடியாக இப்படிக் குறிப்பிட்டது இலக்கிய விழாவிற்கு வந்திருந்த மற்றவர்களை ஆச்சரியப்படுத்தியது.

விசா விதிமுறைகள் விலக்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தானியப் பிரதமர் கருதினாலும் நடைமுறையில் இவை கட்டுப்படுத்தப்பட்டே இருக்கின்றன.

65 வயதுக்கு மேற்பட்டோருக்கே உடனடி விசா வழங்கப்படுகின்றது என்றபோதிலும் இவற்றின் பயன்பாடு குறைவாகவே இருக்கின்றது. (அ-2)

# இந்திய - மியன்மார் எல்லையில் எல்லை பாதுகாப்பு படையினர்

## ஆராய்கிறது மத்திய அரசு

(புதுடில்லி)

இந்திய-மியன்மார் எல்லையை வலுப்படுத்த, அங்கு பாதுகாப்பு பணியிலிருக்கும் அசாம் ரைஃபிள்ஸ் படையினருக்கு பதிலாக, 41ஆயிரம் எல்லைப்பாதுகாப்பு படையினரை (பி.எஸ்.எப்) ஈடுபடுத்துவது குறித்து மத்திய அரசு இவ் வாரம் முடிவெடுக்கவுள்ளதாகத் தெரிகிறது.

மேலும், எல்லைப் பகுதி உட்கட்டமைப்பை 5ஆயிரம் கோடி ரூபாவில் மேம்படுத்தவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

ஆயிரத்து 640 கி.மீ. தொலைவுள்ள இந்திய-மியன்மார் எல்லைப் பகுதியில், பி.எஸ்.எப் வீரர்கள் நிறுத்தப்படுவது குறித்த விரிவான தகவல் அறிக்கையை இப்படையின் அதிகாரிகள் தயார் செய்து விரைவில் உள்துறை அமைச்சகத்திடம் தாக்கல் செய்யவுள்ளனர்.

எல்லை ஆய்வுக் குழுவினர் முன்னதாகவே வனப்பகுதி மற்றும் தரைப்பகுதி வழிகளை ஆய்வு செய்து முடித்துள்ளனர். இந்திய-மியன்மார் எல்லைப் பாதுகாப்புப் பணிக்கு 41ஆயிரம் வீரர்கள தேவைப்படுவார்கள் என பி.எஸ்.எப் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் உட்கட்டமைப்பு வசதிகளை 5 ஆண்டுகளில் செய்து முடிக்க, 5ஆயிரம் கோடி ரூபா செலவாகும் எனவும் மதிப்பிட்டுள்ளனர்.

எல்லைப் பகுதியில் பி.எஸ்.எப் வீரர்கள் நிறுத்தப்படுவதன் மூலம் தீவிரவாத ஊடுருவல்கள், போதைப்பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் எல்லைப் பகுதி வழியாக கடத்தப்படுதல் ஆகியவை முற்றிலுமாக தடுக்கப்படும்.

"இந்திய-மியன்மார் எல்லையில் 5ஆயிரம் கோடி ரூபா செலவில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்துக்கான அங்கீகாரத்தை அரசு இந்த வாரத்தில் வழங்கும்" என்று பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது பி.எஸ்.எப் வீரர்கள் பாகிஸ்தான்-வங்கதேச எல்லைப் பாதுகாப்புப் பணியிலும், அசாம் ரைஃபிள்ஸ் படையினர் இந்திய-மியன்மார் எல்லைப் பாதுகாப்பு பணியிலும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஏமன் நாட்டிற்கு இந்தியா கோதுமை அனுப்பிவைப்பு

(சனா)

ஏமன் நாட்டின் உணவுப்பஞ்சத்தைத் தீர்க்கவென இந்தியா சுமார் 2 மில்லியன் டொலர் பெறுமதியுள்ள 2 ஆயிரத்து 500 தொன் கோதுமையை மனிதாபிமான உதவியாக அந்நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேற்காசியாக் கண்டத்திலுள்ள வளைகுடா அரபு நாடுகளில் ஒன்றான ஏமன் குடியரசில் சுமார் 2½ கோடி மக்கள் வாழ்கின்றனர்.

முடியாட்சிக்கு எதிராக தொடர்ந்து நடைபெற்ற போராட்டங்களின் விளைவாக இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

கூடவே உணவுப் பஞ்சமும் தலை விரித்தாடுவதால் இலட்சக்கணக்கான முதியோர்களும், பச்சிளம் குழந்தைகளும் ஊட்டச்சத்து குறைவால் மரணத்தைத் தழுவுகின்றனர்.

இந்த அவலநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக உலக நாடுகள் ஏமன் நாட்டுக்கு உதவி புரிய வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை சமீபத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனையொட்டி, சுமார் 2 மில்லியன் டொலர் மதிப்புள்ள 2 ஆயிரத்து 500 தொன் கோதுமையை ஏமன் நாட்டுக்கு மனிதாபிமான உதவியாக இந்தியா வழங்கியுள்ளது.

இந்த கோதுமையை ஏற்றிச் சென்ற முதல் சரக்கு கப்பல் ஹொடைடா துறைமுகத்தை சென்றடைந்தது.

காலத்தின் தேவையறிந்து இந்திய அரசும் இந்தியர்களும் அளித்துள்ள இந்த உதவிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக ஏமன் அரசு கூறியுள்ளது. (அ-2)

# இந்தியாவுடன் நட்பு அவசியம்

## மாலைதீவு ஜனாதிபதி தெரிவிப்பு

(மாலைதீவு)

இந்தியாவுடன் நட்புறவை நிலைபடுத்துவது மாலைதீவு அரசின முதன்மையான கடமை என்று அந்நாட்டு ஜனாதிபதி அப்துல்லா யாமீன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் இந்திய பிரதமர் மன்மோகன்சிங்குக்கு அனுப்பிய கடிதத்தில கூறியிருப்பதாவது,

இந்தியாவுடனான நட்புறவை முதலில வளர்த்து இரு நாடுகளுக்கிடையேயும் நீண்டகால நட்புறவை வலுப்படுத்தும் வழி முறைகளை மாலைதீவு கண்டறிந்து செயற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

யாமீன் தலைமையிலான புதிய அரசுக்கு இந்தியா முழு மூச்சுடன் ஆதரவளிக்குமென இதற்கு முன்னதாக மன்மோகன்சிங் யாமீனுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தோல்விக்கு பந்துவீச்சாளர் அல்ல பனிப்பொழிவுதான் காரணம்: தோனி




மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் ஏற்பட்ட தோல்விக்கு பந்துவீச்சாளர்கள் காரணம் அல்ல என அணித்தலைவர் தோனி தெரிவித்துள்ளார்.

இந்தியா- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதிய இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இதில் முதலில் விளையாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 288 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, மூன்று பந்துகள் எஞ்சியிருந்த நிலையில் 8 விக்கெட் இழப்புக்கு 289 ஓட்டங்கள் எடுத்து, 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு அந்த அணி இந்தியாவுக்கு பதிலடி கொடுத்தது.

இதுகுறித்து இந்திய அணியின் அணித்தலைவர் தோனி கூறுகையில், தோல்விக்கு பனித்துளியே காரணம், பந்துவீச்சாளர்களை குற்றம் சாட்டமுடியாது.

முன்னதாகவே பனிப்பொழிவு ஏற்படும் என்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

இதனால் பந்துவீச்சாளர்கள் பந்தை பிடித்து நேர்த்தியாக வீச சிரமப்பட்டனர். இது ஆட்டத்தின் ஒரு பகுதியாகும், இதற்கெல்லாம் ஒன்றும் செய்ய இயலாது.

எங்களது பந்துவீச்சில் முதல் 5 ஓவர் வரைதான் பந்து ஸ்விங் ஆனது. அதன்பிறகு துடுப்பாட்ட வீரர்களுக்கு ஓட்டங்களை எடுப்பதில் எந்த சிரமமும் ஏற்படவில்லை.

மூன்றாவது மற்றும் கடைசி போட்டி பகல் ஆட்டமாக நடக்கிறது. இதனால் பனிப்பொழிவு பிரச்சினை இருக்காது என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியப் பொருட்களுக்கு வரி விலக்கு அறிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சர் என்ற வகையில் கடந்த 21-ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 10 பொருட்களுக்கு இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (சீபா) கீழ் வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு கடந்த 22-ம் திகதியில் இருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இனிப்பு வகைகளை தயாரிக்கும் பொருட்கள், வர்த்தக விளம்பரம் மற்றும் வணிக மூலப் பொருட்கள், டையில், கனமான இறப்பர், பிளாஸ்டிக், சீப்பு, கொண்டை ஊசிகள், செல்லப் பிராணிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள், பற் தூரிகைகளை செய்ய பயன்படும் நைலோன்கள் போன்றவற்றுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த பொருட்கள் முன்னர் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இதனைத் தவிர தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு அமைய 208 பொருட்களை வரிகள் இன்றி தெற்காசிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய முடியும்.

எவ்வாறாயினும் இந்த வரி விலக்கு மூலம் தேசிய கைத்தொழில் வீழ்ச்சியடையும் எனவும் இதனால் தேசிய கைத்தொழில் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என வர்த்தக அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

இறக்குமதி வரிகள் இன்றி பொருட்களை இறக்குமதி செய்ய இந்தியாவுக்கு வழங்கும் வசதிகளை இலங்கையின் கைத்தொழில் துறையினருக்கு வழங்கினால் நாடு அதன் மூலம் பலன் பெற முடியும் எனவும் அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் நாட்டு மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியும் எனவும் தேசிய கைத்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.







இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் 2013ஆம் ஆண்டுக்கான கராத்தே பலத்திறன் போட்டி அண்மையில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் பளை மத்திய கல்லூரி மாணவர்கள் முதல் முதலாக பங்கு கொண்டு 16 பதக்கங்களை வென்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்களை கௌரவிக்கும் முகமாக கராத்தே கண்காட்சியும், கௌரவிக்கும் நிகழ்வானது 2013ஆம் ஆண்டுக்கான கல்லூரி பரிசளிப்பு விழாவின் போது இடம்பெற்றது.

கராத்தே பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜையும் மாணவன் ஒருவன் பயிற்சி செய்வதையும் வெற்றி பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# பேரறிவாளனின் தாயார் முதல்வருக்கு மனு!

பேரறிவாளனை விடுதலை செய்யக் கோரி அவரது தாயார் அற்புதம்மாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு கோரிக்கை மனு அளித்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளில் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவருக்கு அளிக்கப்பட்ட தூக்குத் தண்டனை, கடந்த 22 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் உள்ளது.

சமீபத்தில் சி.பி.ஐ. முன்னாள் அதிகாரி தியாகராஜன், பேரறிவாளன் சொல்லாத சில வார்த்தைகளையும் அவரது வாக்குமூலத்தில் தான் சேர்த்ததாக கூறியுள்ளார்.

இது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள நிலையில், பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் பேரறிவாளனை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், பேரறிவாளனை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க கோரி அவரது தாயார் அற்புதம்மாள், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு மனு அளித்துள்ளார்.

இது குறித்து முதலமைச்சரின் தனிப் பிரிவில், பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் நேரில் அளித்த மனுவில், தனது மகன் நிரபராதி என்பதற்கு ஆதாரம் உள்ளதாக கூறியுள்ளார்.

மேலும், சி.பி.ஐ. முன்னாள் அதிகாரி தியாகராஜன் கருத்தையும் அந்த மனுவில் அற்புதம்மாள் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் ஆவணப் படம் குறித்த டி.வி.டியையும் மனுவுடன் இணைத்து கொடுத்துள்ளார். (எ-11)

# சொதப்பும் ஷேவாக்




உலகளவில் பந்துவீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர் வீரேந்திரர் ஷேவாக்.

டெஸ்ட் போட்டிகளில் கூட ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளை போன்றே பவுண்டரிகளை அடித்து வெளுத்துக் கட்டுவார்.

ஆனால் தற்போதோ ஒற்றை இலக்க ஓட்டங்களை எடுக்க சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இதனால் இந்திய அணியில் இடமிழந்த ஷேவாக், அடுத்து தனது டெல்லி ரஞ்சி அணியிலிருந்தும் நீக்கப்படும் அபாயகரமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்.

நடப்பு ரஞ்சி தொடரில் ஷேவாக் தொடர்ந்து சொதப்பலாக ஆடி வருகிறார். இதுவரை அவர் மொத்தம் 6 இன்னிங்ஸ்களில் ஆடியுள்ளார்.

இதில் ஒரு முறை கூட அவர் அரை சதம் போடவில்லை. மாறாக 1, 15, 9, 35, 3, 6 என்று சொதப்பலாகவே ஆடியுள்ளார்.

ஷேவாக்கின் திணறல் குறித்து டெல்லி அணியின் தலைமைத் தேர்வாளர் சேட்டன் சவுகான் கூறுகையில், ஷேவாக்கிடம் தற்போது நம்பிக்கை இல்லை என்பதே அவரது தடுமாற்றத்துக்கு காரணம்.

அவர் ஒரே ஒரு நல்ல ஸ்கோரை எடுத்து விட்டால் போதும், பழைய நிலைக்குத் திரும்பி விடுவார் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் மோசமான நிலையிலிருந்து படுமோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார் என்றும், ஆட்டத்திலும் சரி, அவரது நுணுக்கங்களிலும் சரி எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்பதே கிரிக்கெட் வல்லுனர்களின் கருத்தாக உள்ளது.

# இந்திய அணியில் மீண்டும் ஜாகீர் கான்

(சென்னை)

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி அறிவிக்கப் பட்டுள்ளது.

தென் ஆப்ரிக்கா செல்லும் இந்திய அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாட உள்ளது.

இவ்வணியில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜாகீர் கான் சேர்க்கப்பட்டுள்ளார்.

அணிவிபரம் வருமாறு :

டெஸ்ட் அணி: தோனி (அணித்தலைவர்), முரளி விஜய், ஷிகர் தவான், புஜாரா, வீராட் ஹோலி, ரோஹித் சர்மா, ரஹானே, அஸ்வின், உமேஷ் யாதவ், புவனேஷ்வர் குமார், முகமது சமி, ஜடேஜா, அம்பத்தி ராயுடு, சாஹா, இஷாந்த் சர்மா, பிரக்யான் ஓஜா, ஜாகீர் கான்.

ஒருநாள் போட்டிக்கான அணி: தோனி (அணித்தலைவர்), ஷிகர் தவான், ரெய்னா, வீராட் ஹோலி, ரோஹித் சர்மா, ரஹானே, யுவராஜ் சிங், அஸ்வின், புவனேஷ்வர் குமார், மோஹித் சர்மா, ஜடேஜா, அமித் மிஸ்ரா.

# அத்தியாவசிய பொருட்களின் விலை திடீரென அதிகரிப்பு

## பால்மாவும் அதிகரிக்கும்!

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டத்தின் எதிரொலியாக பல அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான விலைகள் உயர்வடைந்துள்ளன.

2014-ம்ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட யோசனை கடந்த 21-ம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வரவு செலவுத் திட்டத்தின் யோசனைகளுக்கு அமைய பல அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

சீனி, கருவாடு, நெத்தலி, தோடம பழம், மாசி, பயறு உள்ளிட்ட பொருட்களுக்கான விலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்தப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்கான வரி உயர்த்தப்பட்டுள்ள காரணத்தினால் இவ்வாறு விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

சீனி ஒரு கிலோ 5 ரூபாவினாலும், கருவாட்டு வகைகள் ஒரு கிலோ 27 ரூபாவினாலும், பயறு ஒரு கிலோ 2 ரூபாவினாலும், மாசி ஒரு கிலோ 27 ரூபாவினாலும், தோடம்பழம் 5 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மக்களின் நலன்களை கருத்திற்கொண்டு இந்த வரவு செலவுத் திடடம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆளும் கட்சி அமைச்சர்கள் பிரசாரம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பால்மாவகைகளின் விலை உயர்வடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பால் மா உற்பத்திகளின் விலையை உயர்த்துமாறு ஐந்து நிறுவனங்கள், நுகர்வோர் அதிகாரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

உலகச் சந்தையில் பால் மா உற்பத்திகளுக்கான விலை உயர்வடைந்துள்ளதாகவும் இதனால் இலங்கையிலும் விலையை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் குறித்த நிறுவனங்கள் கோரியுள்ளன.

கடந்த கால விலைகள் தொடர்பிலான தகவல்களை நுகர்வோர் அதிகாரசபை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயங்களை கருத்திற் கொண்டு விலை ஏற்றம் குறித்து தீர்மானிக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபை அறிவித்துள்ளது. (எ-11)

# மாவீரர் தினம் அனுஷ்டிப்பதை தடுக்கவே அரசு நடவடிக்கை

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கிலுள்ள குடும்பங்கள் மாவீரர் தினத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூருவதை, தடுக்க எடுக்கும் நடவடிக்கைகளை கடுமையாக எதிர்ப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பெரிய நிகழ்வுகளை ஏற்பாடு செயயும திட்டம் கூட்டமைப்புக்கு இல்லை என தெரிவித்துள்ள அதன் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கட்சியின் அலுவலகங்களில் சிறிய நிகழ்வுகள் நடத்தப்படும் என்றார்.

விடுதலைப்புலிகளை ஊக்குவிக்க நேரடியாகவோ மறைமுகமாகவே எடுக்கப்படும் முயற்சிகள் தண்டனைக்குரிய குற்றம் என அரசாங்கம் நேற்று அறிவித்தது. அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசாங்கம் கூறியது.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக வெளியான தகவல்களை அடுத்தே அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு வெளியாகியது.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட பிரேமச்சந்திரன், போரில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களோ, பொதுமக்களோ கொல்லப்பட்டிருந்தால், அவர்களை நினைவு கூர அவர்களின் குடும்பங்களுக்கு உரிமை இருக்கின்றது.

இவ்வாறான நிகழ்வுகளை அரசாங்கத்தினால் தடுத்து நிறுத்த முடியாது.

அப்படி தடுப்பது ஐக்கிய நாடுகளின் இணக்கப்பாடுகளை மீறும் செயல் என சுரேஷ் பிரேமச் சந்திரன் குறிப்பிட்டார். (எ-11)

# ஊடகங்களின் ஊடாக புலிகளை ஊக்குவிக்கக் கூடாது!

## ஊடக மத்திய நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

நேரடியாக அல்லது மறைமுகமாக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் வகையில் ஊடகப் பயன்பாட்டில் ஈடுபட்டால் அது சட்டவிரோதமானது என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நாட்டில் அமுலில் உள்ள சட்டங்களுக்கு அமைய அதற்கு எதிராக நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும் என அந்த நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

நவம்பர் மாதம் இறுதி வாரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

வடக்கு கிழக்கில் அனுஷ்டிக்கப்படுகிறதா என்பதை தமது பாதுகாப்பு படையினர் ஊடாக உன்னிப்பாக அவதானித்து வரும் அரசாங்கம், ஊடகங்களின் ஊடாக மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படலாம் என்ற எண்ணத்தில் ஊடகங்கள் மீதான இந்த மறைமுக எச்சரிக்கையை விடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் மாவீரர் தினம அனுஷ்டிக்கப்பட்டு விடும் என்ற அச்சம் காரணமாக அந்த பகுதிகளில் சாதாரணமாக ஆலயங்களில் கூடும் மக்களை கூட இராணுவத்தினர் கண்காணித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# பயங்கரவாதத்திற்கு...

எதிரான போராட்டம் உலகளாவிய ரீதியில் வரையறுக்கப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். பயங்கரவாதிகள் தமது இலக்கை அடைய பொது மக்களை இலக்கு வைக்கின்றனர்.

பயங்கரவாதத்தை நசுக்க நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகளை ஒவ்வொரு நாடு முழு மனதுடன் ஆதரிக்க வேண்டும்.

பயங்கரவாதத்தை தோற்கடிக்க நாடுகள் இடையிலான ஒரு உண்மையான ஒருங்கிணைந்த முறையான அமைப்பு தேவைப்படுகிறது.

புலனாய்வு தகவல் பரிமாற்றங்கள், கடல் ரோந்து பாதுகாப்பு, கண்காணிப்பு என்பன கடற்படையினர் இடையில் கூட்டு முயற்சிகளை அதிகரிக்க செய்யும்.

பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளை ஒருங்கிணைக்க இதுவே சிறந்த ஒரு வழியாக அமையும் என்றார். (எ-11)

# அடிபணிந்து வாழ...

பதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்ற முற்பகல் நடைபெற்ற வியட்நாம் தேசிய தலைவரின் சிலை திறப்புவைபவத்தில் உரையாற்றும் பொழுதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை சுதந்திரத்தையும் சுயாதனத்தையும் மேன்மையாக மதிக்கும் நாடு. இலங்கை மக்களின் சுயாதீனமாக போராட்டங்களின் சாரம்சத்தை பிழிந்தே மகிந்த சிந்தனை வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

பாரிய ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட வியட்நாம் தேசிய தலைவர் வோ சீ மிங்கின் சிலையை இலங்கை நிர்மாணித்ததை காலத்திற்கு உகந்த நடவடிக்கை என்றார். (எ-11)

# படைத்தரப்பின்...

படைத்தலைமையுடன் கலந்தாலோசிக்காமல் நாட்டின் அரசியல் தலைமைகள் எடுத்த முடிவுகள பல சந்தர்ப்பங்களில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்று மேலும் தெரிவித்துள்ளார்.

1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்முதலாம்ஆம்திகதிமுதல்2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரை இவர் இந்திய படைத் தளபதியாக பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மாவீரர் தினத்தை...

இதனைத் தடுத்து நிறுத்துவது மனித உரிமை மீறலாகும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அரியநேத்திரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே மாவீரர் தினத்தை அனுசரிக்கக் கூடாது என வலியுறுத்தும் அறிக்கையை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலை யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர ஜெனரல் ஹத்துருசிங்க மற்றும் பொலிஸ் பேச்சாளர் ஆகியோரும் வெளியிட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாவீரர் தினத்தையொட்டி, யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம உட்பட்ட பகுதிகளில் படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# பிரபாவின் பிறந்த...

யாழின் பல இடங்களில் துண்டுப் பிரசுரங்கள் இனந் தெரியாத நபர்களினால் விநியோகிக்கப்பட்டு வரும் நிலையிலேயே இவ்வாறு இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இன்றைய தினம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு 59 ஆவது பிறந்ததினமாகும்.

இவரது பிறந்ததினத்தில் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு விடக் கூடும் என்ற அச்சம் காரணமாகவே இத் திடீர் பாதுகாப்பு நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

குறிப்பாக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள மகாத்மா காந்தி சிலையடி, சத்திரச் சந்தி, வேம்படிச் சந்தி ஆகிய இடங்களில் இரவு நேரங்களில் இராணுவத்தினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலை சூழலிலும், யாழ்.பேருந்து நிலையத்தினை அண்டிய இடங்களிலும் மாவீரர் தினத்தினை அனுஷ்டிக்க கோரியும் மாவீரர்களின் தியாகங்கள் குறிப்பிடப்பட்டும் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு இருந்தன.

இச் சம்பவங்களினையடுத்தே யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் இராணுவத்தினரதும், புலனாய்வாளர்களின் கண்காணிப்புக்களும் தீவிரப்படுத்தப்பட்டுளளன.

மேலும் மாவீரர் வாரத்தினை அண்மித்த காலப் பகுதியில் வீதியில் பயணிக்கும் வாகனங்கள் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் பொலிஸ், இராணுவ பதிவிற்குட்படுத்தபபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)


**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.


# வடக்குமாகாண சபையுடன்...

பொருத்தமான விடயமல்ல. யுத்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் பிரிட்டன் உள்ளிட்ட சர்வதேச தரப்பினருக்கு பதிலளிப்பதற்கு ஒரு முறைமை உள்ளது. அந்தமுறைமையின் பிரகாரம் செயற்பட்டால் எவரும எமது நாட்டின் செயற்பாடுகளில் தலையிட முடியாத நிலைமை ஏற்படும்.

அதாவது தற்போது புதிதாக வட மாகாணத்தில் மாகாண சபை உருவாக்கப்பட்டுள்ளதுடன் வடக்கு மாகாண சபையுடன் அரசாங்கத்துக்கு சிறந்த சுமுகமான உறவும் காணப்பட்டு வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி இதன் பின்னர் வடக்கின் அபிவிருத்தி செயற்பாடுகளை வட மாகாண சபை முன்னெடுக்கும். நாங்கள் உதவிகளை மட்டுமே வழங்குவோம் என்று வலியுறுத்திக் கூறியிருந்தார்.

அதன்படி அதிகாரப் பகிர்வு விவகாரங்கள், 13-ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துதல், தமிழ் மக்களுக்கான அரசியல்சட்ட உரிமைகள்போன்ற விடயங்கள் குறித்து அரசாங்கம் வட மாகாணத்துடன்விரிவாக கலந்துரையாடல்களை நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்துவிட்டால் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்பட்டுவிடும்.

எனவே அரசாங்கமும் வட மாகாண சபையும் இணைந்து முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை எட்டிவிட்டால் இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தினால் இலங்கை விவகாரங்களில் தலையிடுவதற்கு காரணங்கள் இருக்காது. கமரூன் உள்ளிட்ட சர்வதேச தரப்பினரின் தலையீடுகளை தவிர்ப்பதற்கு இதுவே காணப்படுகின்ற சிறந்த வழியாகும்.

இதற்கான பொறிமுறையை உருவாக்கி வட மாகாணத்துடன் அரசாங்கம் விரிவான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும். ஒரு குறிப்பிடட காலப்பகுதிக்குள் இந்த கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு முடிவுகள் வரவேண்டும். இதன் முடிவுகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தமட்டில் சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மை காரணமாக பாராளுமன்றத்தில் இடம்பெறாமல் இருக்கலாம். ஆனால் அரசாங்கம் வட மாகாணத்துடன் பரந்துபட்ட கலந்துரையாடல்களை ஆரம்பிக்குமாயின் அது ஆரோக்கியமானதாகவே அமையும் என்றார். (எ-11)


**பதவி வெற்றிடம்**

கிளிநொச்சி நகரப் பகுதியில் இயங்கவுள்ள அச்சகத்துறைக்கு கணனி தமிழ் தட்டச்சு மற்றும் ஈமெயில், இணையம் ஆகியவற்றில் சிறப்பான தேர்ச்சியும் முன்னனுபவமுள்ளவர்களிடம் இருந்து (இருபாலாரும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமையுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தே.அ.அ.இல, கல்வித் தகைமை, தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை விளம்பர இல:- C-5575, மே/பா வலம்புரி இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக் கு எதிர்வரும் 30-ந் திகதிக்கு முன்னதாக தபாலில் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : கிளிநொச்சி நகரை அண்மித்து வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இ)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.